Registered At The
G. P. O. Colombo
As A Newspaper.

திராவிடன்

THE DRAVIDAN.

A Monthly Newspaper.

"சமன்செய்துசீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற்
கோடாமைசான்றோர்க்கணி."

சந்தா விளம்பரம்.

தபாற்செலவின்றி வருஷம் ஒன்றுக்கு			ரூ. 1-00
தபாற்செலவு உட்பட	,,	,,	ரூ. 1-25
மலாய்நாட்டிற்கு	,,	,,	ரூ. 2-50

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்
தனிப்பிரதி 10 சதம்.
முற்பணமாகவே அனுப்பவேண்டியது.

விளம்பர விகிதம்.

1	கலம் முதன்முறை		ரூ. 4 50
¾	,,	,,	ரூ. 3 00
½	,,	,,	ரூ. 2 50
¼	,,	,,	ரூ. 1 50

அடுத்தமுறைகளில் ½ வாசி
சில்லறை விளம்பரங்களுக்கு ரூபாத்தொகை முற்காசு கட்டவேண்டும்.

புத்தகம்—1. {யாழ்ப்பாணம்-சுன்னாகம்:-பிரபவ௵ கார்த்திகை௴ ௨௰௨ (1927 டிசெம்பர்௴ 6) செவ்வாய்க்கிழமை.} இலக்கம்—10.

உ
கடவுள் துணை.

அங்கிங்கெனாதபடியெங்கும்பிரகாசமா
யானந்தபூர்த்தியாகி
யருளொடுநிறைந்ததெதுதன்னருள்வெளிக்குவே
யகிலாண்டகோடியெல்லாந்
தங்கும்படிக்கிச்சைவைத்துயிர்க்குயிராய்த்
தழைத்ததெதுமனவாக்கினிற்
றட்டாமனின்றதெதுசமயகோடிகளெலாந்
தந்தெய்வமெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந்தெதிர்வழக்கிடவுநின்றதெது
வெங்கணும் பெருவழக்காய்
யாதினும்வல்லவொருசித்தாகியின்பமாய்
யென்றைக்குமுள்ளதெதுமேற்
கங்குல்பகலறநின்றவெல்லையுளதெதுவது
கருத்திற்கிசைந்ததுவே
கண்டனவெலாமோனவுருவெளியதாகவும்
கருதியஞ்சலிசெய்குவாம்.

விசேஷ அறிக்கை.

1. திராவிடனுக்குச் சந்தாதாரராகச்சேர விரும்புங் கனவான்கள் முற்பணமனுப்பியேனும் அல்லது வி. பி. மூலமாயேனும் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

2. பணமனுப்புகிறவர்கள் 'பொக்கிஷதார் யாழ்ப்பாணம் தாழ்த்தப்பட்டவர்களின் சங்கம், சுன்னாகம்' என விலாசமிட்டனுப்பவேண்டும்.

3. உள்ளூர்ச் சந்தாதாரர்களும் மேற்காட்டிய விதமே சந்தாத் தொகையைக் கட்டி ரசீது பெற்றுக் கொள்ளவும்.

4. கடிதமெழுதுவோர் தங்கள் விலாசத்தைத் தெளிவாய் ஒவ்வொருமுறையுமெழுதவேண்டும்.

திராவிடன் ஆபீஸ்,
சுன்னாகம்.

நம்சாகியத்தவர்களுக்கு ஓர் அறிவிப்பு.

தொண்டமானூர் செல்வச்சந்நிதி கோயிலில் நம்மவர்களால் கட்டப்பட்டிருக்கும் மடம் இப்பொழுது பழுதடைந் திருப்பதினால் அம்மடத்தைத் திருத்துவதற்கு யாபேருங் கருணைகொண்டு தங்களால் கூடிய பொருளுதவி புரியுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். சங்கத்தின உபகாரியதரிசி.

நாற்றிசை நோக்கு.

யந்திர மனிதன்.

மானிடர் குரல்கேட்டு அவர்கள் கட்டளையிடுவதுபோல் நடக்கத்தக்க 'யந்திர மனிதன்' என்னும் ஒருவகை நூதனமான யந்திரமொன்றை சமீபத்தில் அமெரிக்காவில் நியூயார்க் நகரில் ஒரு மின்சாரக் கம்பெனியார் செய்து காட்டினார்களாம்.

கப்பலைக் கவிழ்க்க வந்த திமிங்கிலம்.

அரிசிமூடை ஏற்றிச்சென்ற ஒரு சிறு கப்பலைக் கவிழ்க்க வந்த 94 அடி நீளமும் 64 அடி அகலமும் உள்ள ஒரு திமிங்கிலம் அக் கப்பல் மாலுமிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுக் கொச்சி சமஸ்தானம் சேரை என்ற கடற்கரையோரமாக மிதந்து வந்து சேர்ந்திருக்கிறதாம்.

மனைவியின் பிடிவாதம் கணவனின் தற்கொலை.

முரட்டுவாவில் இராமன் என்னும் ரெயில்வேக் கூலியொருவன் தனது மனைவி சில தினங்களுக்குமுன் வேறொருவனுடன் கூடிக்கொண்டு ஓடியபின்பும் அவளிருப்பிடந் தேடி அவளைத் திரும்பவுந் தன்னோடு வரும்படி மன்றாடிக் கேட்டும் அவள் பிடிவாதமாய் மறுத்தமையால் அவன் புகைரதப்பாதையில் புகைரதம் வரும்போது நடுவில் படுத்துக்கொண்டானாம். இதையறியாத புகையிரதம் அவனை இரு கூறுபடுத்திக் கொன்றுவிட்டதாம்.

இனி வரும் உலக யுத்தம்.

1928-ம் ஆண்டு வைகாசி மாதம் 28-ந் திகதி தொடங்கி 1936-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 16-ந் திகதி வரைக்கும் முழு உலகத்தையும் அதிரச்செய்யும் பாரிய யுத்தமொன்று நடக்குமென ஒருவர் தீர்க்கதரிசன முரைத்திருக்கிறார். நடந்து முடிந்த ஐரோப்பிய மகா யுத்தம் ஆரம்பித்த காலத்தையும் இவரே முன்பு குறிப்பாய்ச் சொல்லினராம். எகிப்தி லிருக்கும் புராதன சிலாசாசனங்களிலிருந்து ஏதோ வகையாய் இவர் இந்த யுத்தத்திலே ரூஷிய இராச்சியம் முற்றாய் அழிக்கப்படுமென்பது இவர் கூற்று எனவும் வெளியாகின்றது.

எங்கள் முறையீடு.

பெரியோர்களே! உங்கள் திருவடிக் கமலங்களுக்கு அனந்தகோடி வந்தனம். தயவு செய்து எளியேங்களது வேண்டுகோளுக்குச் சிறிது செவிசாய்த்தருள வேண்டுகின்றோம்.

இறைவன் திருவருளால் நாம் அனைவரும் இப்பூவுலகில் பிறந்தோம் வினை காரணமாக எங்களுக்கும் உங்களுக்கும் பிறவி பேதமாக விருந்தாலும் ஜீவாத்மா ஒன்றே! நாம் அனைவரும் ஆண்டவனுடைய மக்களே! நாங்கள் பிறவியில் தாழ்ந்தோர்களானாலும் ஊமர்களானாலும் பிறந்த நாள் தொடங்கி மூத்த சகோதரர்களாகிய உங்களுக்கே உழைத்து வருகின்றோம். நன்றி மறத்தல், நம்பிக்கைத் துரோகம், மித்திரபேதம் முதலிய தீய குணங்கள் எங்களிடத்திற் கிடையாது. நிலையிலாப் பொருளிலும் நலமிலாப் புகழிலும் இச்சை இல்லை. உங்களுக்கு உதவி செய்வதே எங்கள் பிறவியின் நோக்கம். எங்கள் தியாகம் உலகறிந்ததே. எங்களால் நீங்க ளடைந்திருக்கும் நன்மைகளுக்கு அளவில்லை. நீங்கள் உண்ணும் உணவு யாருடைய உழைப்பால் வந்தது? தாயற்ற உங்கள் சேய்களைப் பாலூட்டி வளர்த்து வருவது நாங்கள் அல்லவா? நீங்கள் உடுப்பதும், போர்ப்பதும் எங்கள் கம்பளந்தானே? அதிகாலையில் உங்களை உறக்கத்தினின்றும் எழுப்புவது நாங்களன்றோ? அப்படியிருந்தும் உங்கள் உரிமையில் பாகங்கேட்கின்றோமா? செல்வத்தில் பங்கு வேண்டுகின்றோமா இல்லையே! சொல்லி முடியாத நன்மைகளை யெல்லாம் எங்களிடத்தில் பெற்றுக்கொண்டு நீங்கள் எங்களுக்குச் செய்யும் கைம்மாறு என்ன? கழுத்தறுப்புத்தானே? இது அறமாகுமா? நீதியாகுமா? சொல்லுங்கள்! எங்களுக்கு உயிர்ப் பிச்சை அளித்தால் உங்களுக்குப் புகழும் புண்ணியமும் உண்டு துரோகஞ் செய்தால் முடிவாகக் கடவுள் சந்நிதானத்தில், இந்தத் தீவினைகளுக்கெல்லாம் பதில சொல்லவேண்டும், கொலைப்பாவம் விடாதென்பதையும் எச்சரிக்கின்றோம்.

உங்கள் ஊழியர்கள்
ஆடு மாடு கோழிகள்.

(இராபட்சன்பேட்டை K. G F ஜீவகாருண்ணியசங்கத்தார் வெளியீடு.) —லோகோபகாரி

மாத்மா காந்தி அவர்களின் பிரசாரணம்.

முற்றவெளியிற் கூட்டம்.

சென்றமாசம் 26உ சனிக்கிழமை பின்னேரம் 3 மணி தொடக்கம் மூன்றேமுக்கால் மணிவரையில் முற்றவெளியில் மகாத்மாவுக்கு உபசாரணை நடக்குமென்ற விளம்பரத்தை உத்தேசித்து 2 மணி வரையில் சனங்கள் நாற்றிசையிலிருந்தும் புறப்பட்டுச் செல்வாராயினர். முற்றவெளி இந்தச் சனங்களுக்கெல்லாம் இடங்கொடுக்குமோவென்று கண்டோர்சந்தேகப்படலாயினர்.

முன்னொருநாளுங் காணாத சனத்திரள்

யாழ்ப்பாணம் முற்றவெளியில் முன் எக்காலத்திலும் இத்தொகைப் பெருந் திரளான சனங்கள் கூடினதில்லையென்று சொல்லும்படி ஏறக்குறைய இருபதினாயிரம் மதிக்கக்கூடிய சனங்கள் ஆடவர் மகளிர் பாலர் விருத்தர் பல்வகைச்சாதியினர் பல்வகை வகுப்பினர் பல்வகைச் சமயத்தினர் யாழ்ப்பாணத்துள்ள எவ்வகையான உத்தியோகத்தினர் எல்லாரும் வந்து கூடினர். யாழ்ப்பாணப்பிரிவில் அதிக தூரித்த பகுதியாகிய பருத்தித்துறை பளை முதலிய இடங்களிலிருந்தும் வந்துகூடினர். யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள மோட்டாரதங்கள் மோட்டர்பஸ் என்று சொல்லப்படும் இவைகளுள் நூற்றுக்கு 75 விகிதமானவை அச்சமையத்தில் ஒருபாகமாக நிரைபெ நிற்கக்காணப்பட்டன. பந்தல் உயரமாக இடப்பட்டு, மிகவும் தூரத்தில் நிற்பவர்களும் மகாத்மாவைத் தரிசிக்கத்தக்கதான உயர்ந்த மேடை இடப்பட்டிருந்தது. கதர்த் துணியினால் மூடப்பெற்ற ஆசனமொன்று அந்த மேடையிமீது வைக்கப்பட்டது. இங்ஙனமாக மகாத்மாவும பாரியாரும் இராசகோபாலாச்சாரியார் முதலாங் கூட்டத்தினரும் மோட்டர் ரதத்திலிருந்தும் இறங்கிப் பந்தரை நோக்கி நடந்துவரக் காணப்பட்டனர். எல்லார் கண்களும் பந்தருக்கு வரும் வாய்தலை நோக்கின. புண்ணியவானை, தாங்கள் நெடுநாளாகக் கேள்விப்பட்டிருந்த மகானை, தேசாபிமான நாயகத்தை, உலகப் பிரசித்திபெற்ற உத்தமபுருஷனை, சாந்தமூர்த்தியாகிய மகாத்மா காந்தியைச் சனங்கள் தங்கள் கண்ணாரக்கண்டு வாயார வாழ்த்திக் கைகூப்பி வணங்கி ஆச்சரியத்தோடு இருந்தார்கள். இருபதினாயிரத்துக்கு மேற்பட்ட சனங்களிடத்திருந்து ஒரு வண்டிரைதலா லுண்டாகுஞ் சத்தந் தானுங் கேட்கப்படவில்லை.

உபசாரப் பத்திரங்கள்.

மகாத்மாவும் கூட்டத்தினரும்வந்து இருந்தபின் கௌரவ ஸ்ரீ துரைசுவாமியவர்கள் யாழ்ப்பாண மகாநாட்டாரின் உபசாரப் பத்திரத்தை மகாத்மாமுன்னிலையில்நின்று படித்தனர். அதன்பின் கௌரவஸ்ரீ கனகரத்தினமவர்கள் பட்டினபரிபாலனசங்கத்தாரின் உபசாரப் பத்திரத்தைப் படித்தனர். அதன்பின்னர் தாழ்த்தப்பட்ட வருணத்தார் கைத்தொழிற் பகுதியார் முதலாம் பலபகுதியாரின் உபசாரப்பத்திரங்களெல்லாம் உதவப்பட்டன. ஆனால் அவைகள் வாசிக்கப்படவில்லை.

மகாத்மா சொல்லியவற்றின் சாரம்.

"இலங்கையின் மற்றும் பாகங்களில் நான் சஞ்சரித்த சமையங்களில் இலங்கையிலேதான் இருக்கிறேன் என்ற எண்ணம் என்மனசிலிருந்தது, ஆனால் இன்று யாழ்ப்பாணத்திற்கு வந்தபின் நான் இந்தியாவிலேதான் இருக்கின்றேன், இந்திய மக்களுக்குத்தான் பிரசங்கஞ் செய்கின்றேன் என்ற எண்ணம் என் மனசில் உண்டாகின்றது; உங்கள் முகங்களும் உடை நடை பாவனைகளும் இந்திய சகோதரர்களுடைய முகங்கள்போலவும் உடைநடைபோலவும் காணப்படுகின்றன உங்களுட் பெரும்பாலர் உங்கள் புராதன ஆசாரங்களையும் பழக்க வழக்க ஒழுக்கங்களையும் கைவிடாதிருக்கின்றீர்கள், மேலும் இந்த இலங்கையிலே யாழ்ப்பாணத்தவர்களாகிய நீங்கள் மதுபானத்தை ஒழித்துவிடுதற்கான மார்க்கங்களில் முயற்சிசெய்து ஒருவாறு அனுகூலப்படும் நிலைமையி லிருக்கின்றீர்களென நான் அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். கள் சாராயம் என்று சொல்லப்படும் மதுபானங்களால் வருங் கேடுகள் பல என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள்."

எஸ். கே. லோட்டன் அன்டுகோ.
பறங்கித்தெரு, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் காலஞ்சென்ற ஸ்ரீமான் க. லோட்டன் காலந்தொடங்கி, நாங்கள் புகைப் படம் எடுத்து வருகிறோம் உங்களுக்கு உங்களைப்போல காண விருப்பமிருந்தாலும அல்லது மற்றும் பட்சமுள்ளவர்களை நேரிற் காண விருப்பமிருந்தாலும் செய்வதென்ன?

எங்களுக்கு ஓர் கார்ட்டு எழுதி அறிந்து கொள்ளவும்.

மானேஜர்,
S. K லோட்டன் & Co

கருணையில்லா வைத்தியம்.

(வள்ளுவ விகடன் எழுதுகிறன்)

நோயற்ற வாழ்வே குறைவற்றசெல்வம் என்பது பெரியோர் வாக்கு. இதற்கிணங்கவே ஆயுள்வேத வைத்தியர்களும் நமது நாட்டில் நிரம்பியிருக்கின்றனர். ஆயுள்வேத வைத்தியம் கடவுளின் கருணையுடன் மகாரிஷிகளாலேயே உண்டாக்கப்பட்டது வைத்திய முறையில் மிகவும் விசேடம்பெற்றும் நம் கற்றுக்குட்டி வைத்தியர்கள் வைத்திய முறைகளைக் கொஞ்சமும் படியாது தம் முன்னோர் வைத்தியம் நடத்தியதைக் கண்டு தாமும் பைத்திய மாக இருந்து பிணிகளைச் சொஸ்த மாக்குவோ மெனப் புகழ்ந்து பேசி அறியாமையுடைய பாவி மனிதர்களை யேமாற்றி பணம் பறிக்குங் கோட்டுப்புலிகளைப்போன்று பாவம்பழிக்கஞ்சாது உயிர்களை எமனுலகிற்கு அனுப்பிவரும் வைத்தியர்களே சற்றுக் கவனியுங்கள். வைத்தியர்களே உங்கள் குடும்பத்திலாவது பந்துக்கள்குடும்பத்திலாவது நோயுள்ளபோதே நீவிர் ஆஸ்பத்திரிகளுக்கு உடனே வண்டி கட்டிச் செல்வதும் பிறத்தியான் குழந்தைகளில் நம் வைத்திய பரீட்சையைப் பார்ப்பதும் யோக்கியமா அழகா சற்றே கவனியுங்கள், குரங்கிற்கும் தன்குட்டி பொன்குட்டியென்பது போல மனுஷசுபாவமின்றி மாடு ஆடென மதித்து வைத்தியஞ் செய்து துன்புறுத்தி வருகின்றீர்களே. இதனாலேற்படும் பாரசுட்டிற்கு பின்னுகுதல் என்ன சொல்லப்போகின்றீர்களோ. உங்கள் கண்முன்னிலையிலிருந்த எத்தனையோ வைத்தியர்களின் குடும்பங்கள் கெட்டழிந்துபோனது.

பொதுவாக ஆயுள்வேத வைத்தியர்களை குறிப்பிடவில்லை. சில கற்றறிவில்லாத வைத்தியர்களையே குறிப்பிடுகின்றோம், பாருங்கள் சமீபத்தி லிருக்கும் வைத்தியர்களை விலக்கி சில்லாலை மாதகல் பண்டத்தரிப்பு முதலிய இடங்களிலிருக்கும் வைத்தியர்களைத் தேடுவதும் ஒவ்வொரு ஊர்களிலும் இப்படியே தூரத்து வைத்தியர்களையே நாடிக்கொள்வதினால் இவர்களின் அறியாமையைக் கண்டு வைத்தியராகுதல் அறிவுடன் வைத்தியஞ் செய்வதே நலம்.

அறிவுடையோர் பாலதே உயர்வு.

உயர்வைக்கருதுங்கால் தாழ்வு என்னும் பதம் ஏற்பட்டது. இது யாரும் மறுப்பதற்கில்லை. உயர்வென்னும் பதத்தைக் கருதியது எது, மனம். தாழ்வைப்பற்றியது கன்மம். இக்கன்மம் நம்தமிழ்நாடு முழுமையும் பாழாக்கி மக்களின் சமூகத்தைப் பிரித்து அதோகதி யாக்கிவிட்டது. மேலைத் தேசங்களில் கன்மம் என்னுஞ் செய்யுள் இறந்துவிட்டது. உயர்வு உறங்கிவிட்டது. பின் எது தாண்டவமாடுகின்றது. விசாலம் பொருந்திய அறிவு. இவ்வறிவின் பெருமையை நாமிங்கு குறிப்பிடுதல் தகாதென முடிக்கின்றும. சைவத் திருமுறையில் "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார்சடைக்கரந்தார்க் கன்பராகில் நாம்வணங்குங் கடவுளாரே" எனவும் முழங்குவதால் சைவசமயத்திலே உயர்வு தாழ்வைக் கண்டிக்கிறது.

தனலட்சுமி புத்தகசாலை.

அன்பார்ந்த வித்தியாபிமானிகளுக்கு அறிவிப்பது:—

ஷைபுத்தகசாலையில் சகலவிதமான பள்ளிக்கூடப் புத்தகங்களும் பள்ளிக்கூடங்களுக்கு வேண்டும் மற்றுஞ் சகல சாமான்களும் "யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிர்த்திச்சங்க" பரீட்சைக்குரிய புத்தகங்களும் ஆசிரியர் பிரவேச பரீட்சை, இரண்டாம் மூன்றாம் தராதலப்பத்திரம் பெறுவோர்க்குரிய புத்தகங்களும் ஏதாநூல்களும் கிடைக்கும். வேண்டியவர்கள் நேரிலும் வீ. பீ. மூலமாயும் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியர்களுக்குத் தக்க கழிவுகொடுக்கப்படும்

தனலட்சுமி புத்தகசாலை
சுன்னாகம்.

திராவிடன்.

சன்னுசு:— 1927,
கார்த்திகை௴ 21௳ செவ்வாய்க்கிழமை.

கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க, முன்னின்று பின்னோக்காச் சொல். குறள்.

காந்தி அடிகள்.

காந்தி அடிகள் யாழ்ப்பாணத்தில் நான்கு தினங்களாகத் தங்கிநின்றனர். கதர்நிதியின் பொருட்டு அடிகளுக்கு பொருள் திரட்டிப் பள்ளிக்கூட மாணவரும் ஆசிரியரும் பிற தேசிய உணர்ச்சி வாய்ந்த பெரியோரும் அளித்தனர். அடிகள் சென்றவிடங்களெல்லாம் ஆயிரக்கணக்கான சனங்கள் அவரைத் தரிசிக்குமாறு கூடிநின்றனர். தாழ்த்தப்பட்டவர்களின் பொருட்டு அடிகள் மிகவும் பரிவுகாட்டி அவர் கடைத்தேறுதற்குரிய நன்மொழிகளைப் பசுமரத்தாணிபோல உள்ளத்திற் பதியும்படி கூறினர். தாழ்த்தப்பட்டவர்கள், அறிவை மயக்கி அல்லற்படுத்தும் மதுபானத்தை ஒழித்து, மாமிச போசனத்தை நீக்கி, ஒவ்வொருநாளுங் குளித்து சுத்தமான வேட்டி சால்வை அணிந்து நல்லொழுக்கமும் கல்வியறிவு முள்ளவர்களாக விருப்பின் பிறரால் இவர் உயர்ந்தவர்கள் என்றே மதிக்கப்படுவார்களெனக் கூறினர். தாழ்த்தப்பட்ட சகோதரரின் கல்வி வளர்ச்சிக்காகச் சுன்னாகத்தில் அமைக்கப்போகும் பாடசாலைக்குக் காந்தி அடிகள் தமது திருக்கையினால் அத்திபாரக்கல் வைத்தனர். பெண்கள் விலையுயர்ந்த பட்டுப் பீதாம்பரங்களிலும் கண்ணிறைந்த ஆபரணங்களிலும் பொருளைச் செலவிடுதல் பயனற்றதென்றும், அதிகபொருள் செலவுசெய்து பெரும் மாளிகைகளைக் கட்டி எழுப்புதல் உபயோகமற்றதெனவும் அடிகள் கூறுவாராயினர். இதனைக் கேட்டுக்கொண்டிருந்த பட்டுப் பீதாம்பரமும் வைரம் வைத்திழைத்த பசும்பொன்னாபரணங்களும் சுமந்துகொண்டிருந்த செல்வச் சீமாட்டிகளும் மச்சு மாளிகைகளில் வசிக்கும் சீமான்களும் தலை இறங்கி மிக நாணினர். அருவருக்கத்தக்கவர்களும் ஊர் நடக்கை மலிந்தவர்களுமாகிய தாசிகளைப் பரிசுத்தம் நிறைந்த தேவாலயங்களிலே அழைத்து நடிப்பித்தலும், வாய்பேசமாட்டாத ஏழைப் பிராணிகளாகிய ஆடு கோழி முதலியவற்றை ஆண்டவன் சந்நிதியில கூரிய கத்தியினால் வெட்டிப் பலியிடுதலும் வெட்கத்தக்கதும் கடவுளின் முனிவுக்கும் உரியனவெனப் புகன்றனர். தீண்டாமையென்னும் பொல்லாதபேய் இந்தியநாட்டை விட்டு ஓடவேண்டுமென்பதும், எல்லாருக்குமிடையில் நல்ல ஒற்றுமை நிலைக்கவேண்டுமென்பதுமே அடிகளின் பிரார்த்தனையாகும். அடிகளிடத்தில் எல்லாவுயிர்களிடத்தும் தண்ணளி ததும்பி விளங்குகின்றது ஆதலின், அந்தணன் என்னுஞ் சொல்லுக்கு அடிகளே இலக்கியமாக அமைந்திருக்கின்றனர். ஏனையரை அந்தணன் என்பது பொன் இல்லாதவனைப் பொன்னனெனக் கூறுவதுபோன்றதோர் உபசாரவழக்காகும். வருணாச்சிரமம் என்பது இடைக்காலத்திற் கட்டப்பட்டதோர் பொல்லாத புரளி.

உயிர்கட்கு நேரும் நோய்களெல்லாவற்றினும் பசிப்பிணி மிகப் பொல்லாதது.

"குடிப்பிறப்பழிக்கும் விழுப்பங்கொல்லும்
பிடித்தகல்விப் பெரும்புணைவிடூஉ
நாணணிகளையு மாணெழில்சிதைக்கும்
பூண்முலைமாதரொடு புறங்கடைநிறுத்தும்
பசிப்பிணியென்னும் பாவியதுதீர்த்தோ
ரிசைச்சொலளவைக்கென் னாநிமிராது"

எனச் சீத்தலைச்சாத்தனார் மணிமேகலையிற் கூறியுள்ளார். இன்னும்,

"மண்டிணிஞாலத்து வாழ்வோர்க்கெல்லா—
முண்டிகொடுத்தோருயிர்கொடுத்தோரே"

என்றும் மணிமேகலை அடிகளால் பசிப்பிணி மாற்றுவோரின் சிறப்பு நன்கினிதெடுத்து விளக்கப்பட்டது. பசிப்பிணியால் துன்புறும் இலட்சக் கணக்கான ஏழைச் சகோதரர்களின் துயரைப் போக்கும் பொருட்டு மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினாலும் ஓவாது உழைத்துவரும் அடிகளின் பரோபகாரச் செயலுக்கு இணை பிறிதுண்டோ? புத்ததேவன் உயிர்களின் துன்பத்தைப் போக்குதற்பொருட்டு 2500 ஆண்டுகளுக்கு முன் அவதாரஞ் செய்ததுபோலக் காந்தி அடிகள் இன்று அவதாரஞ்செய்திருக்கின்றனர். அவர் பிறருக்காகவே வாழ்கின்றனர். இவ்வறிவாளியின் அருளுபதேசங்களைக் கேட்டுக் கடைத்தேறுவது நம்மனோர் கடனாகும். நாமெல்லாம் கதராடையினை உடுத்திக்கொள்ளவேண்டுமென அடிகள் வேண்டிக்கொள்கின்றனர்,

பத்திரிகை வாசிப்பதினாலடையும் பயன்.

பத்திரிகையானது உலகத்தில் நடைபெறும் வர்த்தமானங்களை அப்போதைக்கப்போது தெரிவித்து நமக்குநற்போதனைகளைப் போதித்து வருகின்றன. அதாவது பற்பல தேசங்களில் நடக்கும் விசேஷங்களையும், வியாபாரம், விவசாயம், கைத்தொழில், கல்வி, தானம், அடக்கம், பொறுமை, ஒற்றுமை முதலிய நல்விஷயங்களாலுண்டாகும் நன்மைகளையும், கொலை, களவு, சூது, பொய், விபசாரம், குடி முதலிய துர்க்கிருத்தியங்களால் விளையும் தீமைகளையும், ராஜாங்க விஷயமாய் நடக்கும் விவகாரங்களையும், இன்னும் அநேக விஷயங்களையும் நீதிகளையும் போதித்து வருகின்றனவென்பது கற்றோர் யாவரும் நன்கறிந்த விஷயமே. அவ்வண்ணம் போதிக்கும் பத்திரிகைகளை வாசித்து வருவதினால் ஒருவனுடைய புத்தி நிக்ஷண்யமடைந்து நல்வழியிற் புகுந்து அதனால் அவன் நன்மை பெரிது முடையவனாகி நற்கதியடைகிறான். சொற்பமாக வாசிக்க எழுதத் தெரிந்தவன் ஒரு பத்திரிகையைப் படித்துவருவானாயின் அவனதன் பயனாய் ஓர் நன்மையை யடையாமற்போகமாட்டான். பத்திரிகையானது ஒரு மூடனையும் ஞானவானாக்கக்கூடுமென்பதற்கையமில்லை. அற்பசொற்பமாகப் படித்தவர்களிலனேகர் பத்திரிகை முதலியவற்றை வாசித்து அதன் மூலமாய்க் கல்விப் பயிற்சியையும் சன்மார்க்கத்தையுமடைந்து சொற்பகாலத்திற்குள் கல்வியறிவுடையோனெனப் பெரும் புகழுடன் வாழ்கின்றதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகின்றோம். அன்றியும் எந்நாடு பத்திரிகைகளை விசேஷமாய் அடைகிறதோ அந்நாடு முன்னுக்குவந்து பிரகாசித்து உன்னத பதவியையடையுமென்பது சொல்லாமலே விளங்கும். உதாரணமாக, மேலைத்தேசங்களைக் கவனிப்போம். அவர்கள் தற்காலமிருக்கும் மேற்பதவிக்குப் பத்திரிகையும் ஓர் முக்கிய காரணமென்றே சொல்லலாம். ஏனெனில், மேற்காட்டிய தேசங்களில் கூலிவேலை செய்து பிழைக்கிறவனும் தனக்கென நேரங்கிட்டியவேளையில் ஒரு புஸ்தகமாவது பத்திரிகையாவது ஆவலுடன் வாசித்துவருகிறானென்றால் மேற்சொன்ன தேசத்தவர்கள் செல்வம் ஓங்கி விருத்தியாகிவர என்ன தடை.

நம்தேசத்தில் வருஷாவருஷம் ஒவ்வொரு நவீன பத்திரிகைகள் தோன்றிக் கூடிய சீக்கிரம் அழிந்துபோகின்றன. காரணம் ஆதரிப்பாரில்லாமையே. அந்தோ! என்ன பரிதாபம்! பத்திரிகைகளினாலடையும் பயன் இன்னதென்றறியாமையினாலன்றோ பத்திரிகைகள் நிலைப்பதற்கிடமில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு பத்திரிகைமுதலியன வாங்கிவாசிப்பதற்கு அவாவிருந்தாலும் அதற்குச் சக்தியில்லையென்று மௌனமாகஇருந்துவிடுகிறார்கள். சில கல்விமான்களும் செல்வவான்களும் தங்களுக்குள்ளிருக்குங் கல்வியும் செல்வமும் போதுமென்றெண்ணிப் பத்திரிகைகளை அசட்டை செய்கிறார்கள். இவ்விதமாயின் ஒருதேசம் எவ்விதம் முன்னேற்றமடையும். கல்வியறிவுள்ளவர்களுக்கும் செல்வமுடையவர்களுக்கும் பத்திரிகையினாற் பயனில்லை என்று அவர்கள் எண்ணிக்கொண்டாலும், பிறருக்கு அது பெரும் பயனளிக்குமென்றெண்ணியாவது பரோபகாரசிந்தையுடன் பத்திரிகைகளை ஆதரித்து வருவது அவர்களுடைய முக்கியகடமையென்றெண்ணவேண்டும்.

சீமான்களே! கல்விமான்களே! சீர்குலைந்து சதாவும் இழிநிலைமையிலேயேயிருந்து கஷ்டப்படும் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்தைக் கருதி பிரசுரித்துவரும் 'திராவிடனை' ஆதரிப்பதுடன் பக்கத்துணையாயிருங்கள்.

தாழ்த்தப்பட்ட எம் சாதியினர்களே! தூக்கத்தைவிட்டு எழுந்திருங்கள். திராவிடனைக் கைப்பற்றி அதில் சொல்லிவரும் நல்விஷயங்களைத் தத்தம் இருதயங்களிற் செலுத்தி நாம் இதர சாதியினர்களைப் போல் முன்னேற்றமடையக் கருதுங்கள். "முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்" "ஊக்கமது கைவிடேல்" என்னும் பெரியோர் வாக்கியங்களை அனுசரித்து நடவுங்கள். கடவுள் உங்கள்பால் கிருபைசெய்வாராக.

ஒற்றுமையே முன்னேற்றம்.

ஸ்ரீ சாரதா தேவியின் அம்சமாகிய ஔவைப்பிராட்டியாரின் அற்புத சரிதை.

:o:

வண்ணைநகர் ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை அவர்கள் எழுதியது.

இற்றைக்கு ஆயிரத்து இருநூறு வருடங்களின் முன்னரே, அம்புயாசனனும், அரவணைச் செல்வனும் எனுமிருவருமாகி அடிமுடி தருவி, விசும்பிடைப் படர்ந்தும், படியினை இடந்தும் காண்டற்கரியராய, சொக்கலிங்கப் பெருமானால், எண்ணெட்டாடல் அயரப்பெற்றதும், கருதிய ஞான்றே பிறவாமுத்தியை நல்கவல்லதுமாகிய மதுரைப்புரியின் கண்ணே கடைச்சங்கத்தார் வதிந்து தமிழாராயப்பெற்று, நீதி கோடாது செங்கோலோச்சிய உக்கிரப் பெருவழுதியார் காலத்திலே, தன்மாட்டுத் தஞ்சினோர்க்குச் சாயுச்சியத்தைப் பாலிக்கும் காசியம்பதியில் பொருந்திய பரோநிதீர்த்தத்தை முகர்ந்து காவடியிற் கொணர்ந்து, விஷ்ணுமூர்த்தியின் அவதாரத்தராகிய ஸ்ரீராமரால் இராவண சம்மாரத்தாலெய்திய பிரமஹத்தி நீங்கும்பொருட்டுப் பிரதிஷ்டை செய்யப்பட்ட மகாக்ஷேத்திரமாகிய, இராமேச்சரத்தில் சாந்நித்தியராய் எழுந்தருளியிருக்கும், ஸ்ரீ இராமநாதப் பெருமானுக்கும், பர்வதவர்த்தனி அம்மையாருக்கும், அபிஷேகஞ் செய்விக்குந் திருத்தொண்டைச் சர்ததமும் நியமமாகப் பூண்டொழுகும், "பகவன்" என்னும் பிராமணோத்தமருக்கு, கருவூரில் அவதரித்த வடமினையை சற்பிறப்பறத்த "ஆதி" என்னும் புலைச்சியாரின் உதரத்தின் கண்ணே, தமிழ் நாடெங்கணும் அகவிருள் புலர்ந்து, மெய்புணர்வுசாலும் வண்ணம் ஓர் பெண்மகவு திருவவதாரஞ் செய்தது. அச்சமயத்தில் குழவியைப் பிரசவித்த அன்னையானவர், பிரதமத்தில் தன் நாயகனுக்குத் தேவரீரை எஞ்ஞான்றும் பிரிகிலேனென்று கூறிய சூழுரையையுன்னி, குழவியைப் பிரியக் காலெழாது சிந்தை அலமரும் போழ்து அம்மகவானது ஈன்றாளை நோக்கி நாமகளின் கடாக்ஷத்தால், அம்மணி! கவலுறேல்,

"இட்டமுடனென்றலையி லின்னபடி யென்றெழுதி, விட்டசிவனுஞ்செத்து விட்டானோ—முட்டமுட்டப், பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்னாய், நெஞ்சமே யஞ்சாதே நீ."

என ஓர் வெண்பாவைக் கூறித் தேற்றியது. அக்கவியைச் செவியுற்ற அன்னையானவர் துக்கசாகரத்தினின்றுங் கரையேறி, மனக்குதூகலமெய்திக் கடவுளை நோக்கி இருகரத்தையுங் கூப்பி, ஜகதீச! அநாதைரக்ஷக! அம்பிகைபங்க! ஆன்மநாயக! சச்சிதானந்த! தேவதேவ! திங்கட்சடைய! இம்மகவானது தேவரீருடை திருவடிக்கடைக்கலமென நாயகனைத் தணவாது பின்தொடர்ந்து சென்றனர். அம்மகவானது அவ்வாலமரநிழலில் துயிலுற்றுக் கிடக்கும் அமையத்து, வைகறையில் அவ்வழியாற் சென்ற பாணன் ஒருவன் கண்ணுற்று, அளப்பில் காலம் மிடியாலுழன்றவன் தானியக்குவையைக் கண்டதொப்ப, மகிழ்ந்து வருந்திய அவன் மிக்க ஆர்வத்தோடு குழவியையெடுத்து உச்சிமோந்து, முத்தமிட்டு, முதுகுதைவந்து, தனது இல்லத்திற் கொடுசென்று, பாரியின் கரத்தளித்து மிக்க அருமையாக வளர்த்து வந்தனன். அச்சிசுவுஞ் சுக்கிலபக்கத் தம்புலி போன்று நாளொருமேனியாய் வளர்ந்து வருங் காலத்து, ஓர் ஞான்று வளர்த்த அன்னையும், பிதாவும் இம்மகவுக்கு எப்பெயரிடுவோமென்று சிந்திக்கையில், கலைமகளின் கடாக்ஷத்தால், உலக மாதா என்னுங் கருத்தமைந்த "ஔவை" என்னும் நாமத்தையே யிட்டு அழைக்கக் கடவீர்களென்று விசும்பினின்று ஓர் அசரீரிவாக்கு எழுந்தது. அதைக் கேட்டு இருவரும் மட்டற்ற இறும்பூதெய்தி, அப்பெயரையேயிட்டு மகிழ்ந்திருந்தனர். பின்னர் ஔவைப்பிராட்டியார் ஐயாட்டைப்பிராயமகன்று பேதைப்பருவமமைந்துழி, கலைக்கிழத்தியின் கருணையினால் சகல கலைஞானங்களின் உண்மைப்பொருள்களையும், ஐயந்திரிபற வுணர்ந்து, தமிழ்ப்பாஷையின் முதல் அக்கரமாகிய, அகரம் முதலாயுள்ள எழுத்துக்களை ஆதிரெழுத்தாக, வேதாகமங்களிற் கூறப்பட்ட நீதிசாரங்களையமைத்துச் சூத்திர ரூபமாக, "ஆத்திசூடி" "கொன்றைவேந்தன்" என்னும் இரு பிரபந்தங்களை யியற்றி, அதன்பின்னர் மூதுரையென வழங்கும் "வாக்குண்டாம்" "நல்வழி" என்னும் அரிய பிரபந்தங்களையும் இயற்றியருளினர். இச்சம்பவங்களனைத்தையும், "உக்கிரப்பெருவழுதியார்" என்னுமவேந்தன் தன் ஒற்றரா லுணர்ந்து, அவர் நாமகளின் திருவருளால் உலவாக்கலையுத்தியை ஓதாதுணர்ந்தாரென உன்னித் தம தமைச்சரை யேவித் தன்னுடைய அவைக்களத்தின் கண்ணே யழைப்பித்து, ஓ அம்மணி! நீர் வரகவியாயின் நம்மாட்டு நிகழும் ஆசங்கைகட்குத் தக்க விடையிறுக்குதிர் என்ன, ஔவைப்பிராட்டியார் அரசனை வணங்கி, சந்திரகுலோத்தம! அந்தகனுக்கு அரசரோக்கு வருமா? மேதாவியர் குழுமிய நமது மந்தணத்தில், பேதமையுடையேனாகிய தமியேன் விடையளிக்க ஆற்றலற்றவளாயினும், கறையிடற்றண்ணல் கருணையினால் ஒருவாறு உத்தரவளிப்பேனென ஒருப்பட்டார். அம்மாற்றத்தைச் செவியுற்ற கோமகன் உவகையூர்ந்து, எவ்வெவர்மாட்டு எவ்வெக்காலத்தில் அன்புகாட்டவேண்டுமென வினவ, ஔவைப்பிராட்டியார் மந்தகாசஞ்செய்து, தொடுகடலுலகை யோம்பும் செடிவடிவேலோய்! தனது அந்தரங்க நண்பனை அவனைக்காணாத சமயத்தில் மனமாரப் புகழ்க! தனது குருவையும் எவ்விடத்தும் அவ்வாறே துதிக்க; தனது இலக்கிழத்தியைப் பஞ்சணைமீது மாத்திரம் புகழ்க; தனது புத்திரரை வெளிப்படாது மனதினுள்ளே புகழ்க; தொழிலாளரை அவரால் தொடங்கப்பட்ட பணிவினை முடிந்தபின்னரே புகழ்க; என்னுங் கருத்தையடக்கி,

'நேசனைக்காணாவிடத்து நெஞ்சாரவே துதித்தல்
ஆசானை யெவ்விடத்து மப்படியே—வாச [மில்
மனையாளைப் பஞ்சணையின் மைந்தர்தமை நெஞ்சில்
வினையாளை வேலை முடிவில்.'

என்னும் வெண்பாவைப் பாடியருளினர். அதைக்கேட்ட அரசன் அளவற்ற ஆச்சரியமடைந்து எவரெவரோடு எது எது நீங்குமென வினவ, ஔவையார் சிரக்கம்பஞ்செய்து அன்னையோடு அறுசுவையோடு கூடிய உண்டி நீங்கும்; பிதாவோடு கல்வி நீங்கும்; புத்திரனோடு தான் படைத்த செல்வம் நீங்கும்; உறவினரோடு ஒருவனுக்கு உண்டாயிருக்குஞ் சுகவாழ்க்கை நீங்கும்; சகோதரனோடு தனது புயவலிமை நீங்கும்; தன்னால் மங்கல்யதாரணஞ் செய்யப்பட்ட மனையாளோடு லௌகிகசுகங்கள் அனைத்தும் நீங்கும்; என்னுங் கருத்தையடக்கி,

"தாயோ டறுசுவைபோந் தந்தையொடு கல்விபோஞ், சேயோடு தான்பெற்ற செல்வம் போம்—ஆயவாழ், வுற்றாருடன்போ முடற்பிறப்பாற் றோள்வலி போம், பொற்றாலியோ டெவையும்போம்." என்னும் வெண்பாவைக் கூறியருளினர். (வரும்.)

பொறுமை.

பொறுமை என்னும் வார்த்தையோ மிகச் சிறியதாயிருந்தாலும், அஃதில் அடங்கியிருக்கும் பொருட்களோ வென்றால், இவ்வுலகினும் மறு உலகினும் என்றுங் குன்றாப் புகழை யளிக்கத் தகுந்தனவென்பது "கற்றறிந்த மேதாவிகளின்" கசடற்ற கொள்கை. ஆனதுபற்றியே எவ்வெக்காலங்களிலும், எவ்வெச் சமயங்களிலுமுற்ற மகான்கள் தங்கள் தங்களது அறிவுக்கெட்டிய பான்மையாய் எமபோன்ற புல்லறிவாளர்க்குப் போதனையாலுஞ் செய்கையாலுங் காட்டிவருவதை யாவருங் கண்ணுறக்கண்டுங் காதாரக் கேட்டுமிருப்பார்களென்பதை நாமிங்கு சொல்லிக் காட்டவேண்டியதில்லை. இப்படியே என்றுஞ் ஞான்றும் பொறுமை யெனும் புண்ணியத்தையூட்டிவரும் புனித சிலர்க்குப் பதிலாய் பொறாமையென்னும் மகாபெரிய துர்ப்போதனையைக் காட்ட முயன்று வீண் குதர்க்கமொழிகளைப் பத்திரிகைகளிலும், கடிதங்கள் மூலமாகவும் நேர்முகமாகவும் நின்று வார்த்தையாடிவருகின்றனர். ஆகவே இதனால் நாம் பொறாமையின் 'கணபணுகிய சாத்தானின்' கைவசப்படுவோமேயன்றிப் பொறுமையின் கர்த்தாவாகிய பரமனின் பாதத்திற் சேரவே சேரமாட்டோமென்பது உண்மையினுமுண்மை. இதை முன்னிட்டன்றோ "பொறுத்தார் அரசாள்வார் பொங்கினோர் காடுறைவார்" என்னும் முதுமொழியை இற்றை வரைக்கும் நாம் பாவித்து வருகின்றோம். இம்மொழியை நன்மொழியென்றுணர்ந்து யாவராயினுமொருவர் இதன்படி நடக்கத் தெண்டிக்கிறார்களா? அஃதில்லையே! தற்போதோவெனில் பொறுமை என்பது என்னவென்று முதலாய் அறியாத அனேகம்பேர் தம்மிற் குடிகொண்டிருக்கும் பொறாமையைக் காட்டி வீண் சச்சரவுப்படுகின்றார்கள். அது மட்டோ! எவ்வளவு பணச்செலவு நேரிட்டுக் குடிக்கக் கூடக் கஞ்சிக்கு வழியற்று மனைகள்தோறுஞ் சென்று இரந்துண்ணும் நிலைபரமும் வந்துவிடுகின்றன. அந்தோ! இவ்வித கொடுமையால் "ஆப்பைப் பிடுங்கிய கோடரமானது அவலப்பட்ட பான்மைபோல்" தமக்குத் தாமே சனியனை விலைக்குக் கொள்கின்றனர். இவர்களை இவ்வித கோள்களுக்குள்ளாகாது தப்பித்துக் கொள்ளுமபடியன்றோ தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும் "அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை யிகழ்வார்ப் பொறுத்தல் தலை" எனத் திருவுளம் பற்றினர் இன்னும் பஞ்சபாண்டவர்க்குத் தலைவராகிய தருமர் என்பவர் பொறுமையைக் கடைப்பிடியாய்ப் பிடித்ததினாலன்றோ இற்றைக்கும் அழியாப் புகழ் பெற்று விளங்குகின்றார். இன்னும் எத்தனையோ மேதாவிகளும், தபோதனர்களும், மகான்களும், வித்துவான்களும், ஏனைய சிலமாந்தரும் பொறுமையை அனுசரித்துப் புகழ் பெற்றிருப்பதை முன்னோரால் தந்தருளிய நூல்களில் வாசித்தறிகின்றோமே! இப்படியெல்லாமிருக்கத் தற்போது இவ்

யாழ்ப்பாணத்தின்கண்ணே நடைபெறுஞ் சங்கங்களையும், பத்திரிகைகளையும்பற்றி ஊகித்திடில 'பாம்புங் கீரியும் போலவு' தமது பொருமையைக் காட்டித் திரும்பை மலையாக்கிக்கொண்டு வாதுபுரிகிறார்களே யன்றி "அடம்பன் கொடியுந் திரண்டால் மிடுக்கு" என்பதற்கொப்பாய் யாவரும் ஒற்றுமையுடன் ஒருவர் குற்றத்தை ஒருவர் பாராட்டாது தாமெடுத்த முயற்சியை முற்றுக முடித்துப் பின் அதன் பயனை அடையப்போகிறவர்களாய்க் காணவில்லை. இவர்களிப்படி இருப்பின் தாமெடுத்துக் கொண்ட செயல்கள் யாதும் பிரயோசனமின்றிப் பருதியைக்கண்ட பனிபோல் அகன்றுபோமென்பது யாவர்க்கும் நாம் சொல்லாமலே விளங்கும். ஆகையால் அன்பார்ந்த நேயர்களே! நாம் யாபேரும் பொருமை யெனுங் கொடிய கூளியின் ஏவலை எம்மகத்திருந்தகற்றிப் பொறுமை யெனும் புண்ணியச் செயலை எம்மிடத் திருத்தி ஒற்றுமையெனும் பாசத்தால் எம்மைப் பந்தனப்படுத்தி வருவோமாயிருப்பின் இவ்வுலகிற் கீர்த்தியும் மறுவுலகில் ஆற்றியும் நாமெடுத்த முயற்சிகளிற் தேர்ச்சியு மடைவோமென்பதிற் சந்தேகமில்லை.

"பொறுமை கடலினும் பெரிது".

M. P A.
பலாலி.

பொதுச்சமாசாரம்.

கால நிலை.

இந்தவாரம் சிறு மழை பெய்திருக்கிறது. இடையிடையே மழைக்குணங் காணப்படுகின்றது. பெரிய வெள்ளத்தையே கமக்காரர் ஆவலுடன் பார்க்கின்றனர்.

சுன்னுகம் நெசவுசாலையை மகாத்மா அவர்களின் பாரியார் இந்தமாசம் 28உ பார்த்தார்.

இலங்கையின் புதிய தேசாதிபதியாகிய சேர் ஹேபட்ஸ்டான்லி அவர்கள் இன்று காலை யாழ்ப்பாணம் வந்திருக்கின்றனரென அறியலானேம்.

அறிவுவிளக்கம் இது உடுமலைப் பேட்டையிலிருந்து வெளிவரும் மாதப்பதிப்பு இதன் பெயருக்கேற்ப. அரிய கட்டுரைகள் வெளிவருகின்றன. வருஷ சந்த அணு 6, ஆசிரியர் அ. கிருஷ்ணசாமிப்பிள்ளை உடுமலைப் பேட்டை.

நீங்கள் கம்பனிநூல்களையே இந்து பாவிக்கின்றீர்கள். இதனுல் ஏழைக் குழந்தைகளின் வறுமை நீங்காது. நீங்களே நூலை ஆட்டி நெசவு செயவீர்களாகில், உங்கள் தொழிற்சாலைக்கும் எல்லோரும் நன்மையைத் தருமென்பதற்கு ஐயமில்லை.

சுன்னுகச்சந்தை, மல்லாகம், தெல்லிப்பழை, கந்தரோடை முதலிய இடங்களிலும் மகாத்மாவை அழைத்து உபசரித்து கதர்நிதிக்காய் பணமுடிப்புக் கொடுத்தனர். மகாத்மாவும் அன்புடன் ஏற்று ஆசீர்வதித்தார்.

சைவப் பெரியாராகிய குமாரதேவவள்ளலார் அருளிச்செய்த சுத்தசாதகம் என்னும் நூல் 100 விருத்தப்பாக்களைக் கொண்டதும், தென்கோவை ஸ்ரீமான் ச. கந்தையாபிள்ளை அவர்கள் எழுதிய உண்மைமுத்திநிலை என்னும் விஷயமு மடங்கிய நூல். இது புதுவை நந்தி வெளியீட்டு மன்றத்தவரால் பதிப்பிக்கப் பெற்று வெளிவந்திருக்கிறது இப்புத்தகம் பெறவிரும்புவோர், நந்திப்பள்ளிஷிங் ஹௌஸ் 4, அம்பலத்தாடையர் வீதி புதுச்சேரி என விலாசமிட்டு 2 அணு முத்திரை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். மேற்படி புத்தகத்தை அன்புடன் பெற்றேம்.

நெல்லூரில் புயல்காற்றினுல் 300 பேர்வரை உயிர்துறந்திருப்பார்களென்றும் தளம் போடப்படாத வீடுகளின் கூரைகள் ஒன்றுகூட வில்லையென்றும் லக்ஷக்கணக்கான சொத்துக்களுக்கு நஷ்டமேற்பட்டிருக்கலாமென்றும் தெரிகிறது.

சென்னைக்கும் கல்கத்தாவுக்கும் மத்தியில் காற்றினுல் இரயில்வே லயனுக் கருகிலுள்ள கிராமங்கள் பாழ்பட்டுப்போயினவாம். நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வீடின்றித் தவிக்கின்றனராம். கல்கத்தாவை விட்டு புறப்பட்ட மெயில் 59 மணி நேரம் தாமதமாக வந்ததாம்.

சென்னையில் கனத்த மழையினுல் 10உ ஒட்டேரி பெரம்பூர் முதலிய இடங்களிலுள்ள 12 குடிசைகள் நாசமாயினவாம். சில இடங்களில் முளங்காலளவு ஜலம் பாய்ந்துகொண்டிருந்தனவாம்.

இந்தியாவில் விதவைகளின் தொகை 21255554; இவர்களில் 25 வயதுக்குட்பட்ட விதவைகள் 15306444 பேர்களாவர்; 3112 விதவைகள் மறுமணஞ் செய்துகொண்டிருக்கிறார்கள்.

குடும்பத்தின் செல்வம்.

எவ்வித இன்பத்தையும், செல்வத்தையுமுடையவர்களா யிருந்தபோதிலும் இல்லறத்திற்குரிய இன்பத்தின் ரகசியம் புத்திரபாக்கிய மெனக்கொள்வது சரியே ஏனெனில் ரகசியகிருகம் கிரமமாக நடந்தாலும் சந்தானபாக்கியமில்லாதிருப்பதற்கு! அநேககாரணங்களுண்டு. ஜனனேந்திரியங்களில் இயற்கையாயமைந்த உறுப்புக்களின் கெடுதல்களால் உண்டாகவேண்டிய மலடும், கெற்பப்பையில்வாய்வு தசைவளர்தல் இரத்தக்கட்டு உஷ்ணம் பழையமேகரோகம் முதலிய ரோகங்கள் காரணங்களாம். ஆண்களுக்குஞ் சிலரோகங்களினுல் மலட்டுத்தன்மை ஏற்படுகிறது குழந்தையில்லாதிருப்பதற்குக் காரணம் தங்கள் ஜனனேந்திரியங்களில் உண்டாயிருக்கும் நோய் என்று அறியாமல் ஈஸ்வரசித்தத்தால் அல்லது விதிவசத்தால் தமக்குப் புத்திரப்பேறு இல்லையென்று சிந்தனைகொண்டு கோயில் முதலிய யாத்திரை செய்கின்றார்கள். கோயிலுக்குப்போவதாலும் மலையேறுவதினுலும் யாத்திரை செய்வதினுலும் தேகத்தில் மாறுதல் உண்டாகிக் கெற்பப்பை நல்ல நிலைமையை அடைந்துவிடமுடியுமா? பணத்தைப் பல தானமென வாரிக்கொடுப்பதினுல் கெற்பஸ்தானங்கள் செம்மைப்படுமா? நீங்களும் யாத்திரை செய்யுங்கள் குழந்தைகிடைக்கும் அவர்கள் செய்தார்கள் உண்டாயிற்று, இவர்களும்போய் உண்டாயிற்று என்னும் போலிக்கதைகளிலேயே பிரமை நமக்குள் வியாபித்துவிட்டது. போதாக்குறைக்கு, சோதிடம் குறுக்கிடுவதினுலே மனக்குரங்கை இழுக்கமுடியாது கவலையடைகிறார்கள். அநேகமாகப் பணக்காரர்களுக்குத்தான் குழந்தை இல்லாத ஆடம்பரம் பெரிதாக இருக்கிறது. விடய ஆசையாலும் வியாதியாலும் வருந்தும் இவர்கள் முன் பெரியவர்கள் அப்போ. ஏழைக்குடும்பங்களைத் தொந்தரவுபண்ணி பிள்ளை குட்டிகள் பட்டபரிதாபத்தின் சாப ஈடும் காரணமாயிருக்கலாம். வியாதிக்கு வைத்தியமும் பாவநிவிர்த்திக்கு ஏழைக்குழந்தைகளுக்குச் சோறும் கல்வியும் ஊட்டிப் போஷிப்பதுவே பாவ நிவிர்த்தியெனப்படும். இதைவிடுத்துப் பணத்தை வீணே அழிப்பதில் யாதும் பலனில்லையென்றே செல்லவேண்டும். ஈசுவரபக்தியிலும் மதக்கிரியைகளிலும் நான் விசுவாசமுடையவன் அவைகள் தப்பாகவும் வெளிச்சமாகவுமின்றிப் பணம் சிலவிடப்படாமல் நன்மைக்குரிய மார்க்கமாகச் சாஸ்திரத்தின் கருத்துப்பிரகாரம் பிரயோசனத்தை உண்டுபண்ணும். தருமத்தில் சிலவிடப்பட்டால் செய்தவர்கட்கு நன்மை என்னுங் கொள்கையுடையவன் இதையொழிந்து மேன்மைக்கும் புகழ்ச்சிக்கும் இன்னெருசாராரின் வரும்படிக்கும் ஏற்ற வித வகையிற் பணத்தைச் செலவுசெய்து கடலேறி மலையேறித் தவசுசெய்தும் சந்ததியின்றி வாழுங்குடும்பத்தினற்கு நாம் மேற்கோள்களையே குறிப்பிடுகின்றேம்.

V. Arumukam.

[அவனின்றி ஒர் அணுவுமசையாது என ஆன்றோர் மொழிப. பத்]

ஒடுக்கப்பட்டவர்களின் ஊழிய சங்கம்.

இச்சங்கத்தின் பேரில் "ஓர் அநுதாபி" என்ற நாமதேயத்துடன் கடிதமொன்று மேல்நோக்கப் பத்திரிகையில் காணப்பட்டது. முழுவதையும் வாசித்த எவரும் இவர் ஒரு அநுதாபமின்றி அறிவாளியல்ல என்பதை ஒத்துக்கொள்வார்கள். அதன் நோக்கத்தைப்பற்றியும் தொடக்கத்தில் மகிழ்ந்தமை காட்டி பின்னர் இகழ்ந்தமை இவர் பேதமையே "இச்சங்கமானது சீர்திருத்த முள்ளோரெனத் தம்மைச் சொல்லிக்கொள்ளும் யாழ்ப்பாண மேல்சாதியாரால் மிகவும் கேடாகவும் அற்பமாகவும் அவமதித்து நடத்தப்படும் மனுஷருட் தம்மை மிருகங்களல்ல மனுஷரேயென்று சொல்லும் ஒருகட்சியினரால் ஸ்தாபகமாயது சந்தோஷ செய்தி" என்பதாக உள்ளங்கை நெல்லிக்கனிபோலப் பத்திரிகைகளில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், அடைமொழி முதலியவற்றுடன் பிரகாசிக்க இவர் தனது சிற்றறிவுக் கண்ணுடிக்குள்ளாலே "இச்சங்கமானது சீர்திருத்த முள்ளோரெனத் தம்மைச் சொல்லிக்கொள்ளும் மேல்சாதியரால் ஸ்தாபகமாயது" என்பதாக மாத்திரம் வாசித்தேனென்று வெடிவாலசையக் கொக்கரிக்கிறார். தன் மடைமையை அறியக்கூடிய சக்தியிருப்பின் தன் பிழையை உணர்ந்துகொள்வார்.

சாதிக் கட்டுப்பாட்டுக்கு வயது மூவாயிரமென்கிறார். முப்பதினுயிரமென்றுலுந்தானென்னை! இவருடைய தலைமயிர் பிறப்புடன் வளர்ந்துவாவிடாது தப்புரவு நாகரிகம், லட்சணம் என்ற கத்திரிக்கோல்களுடன் வெட்டிவெட்டி எறிகிறார். மயிரைக் கத்தரிப்பதாவது, சாதியை அழிப்பதாவது கிறிஸ்து மார்க்கத்தின் வேலையாயிருக்கவில்லை. கிறிஸ்துமார்க்கம் யாழ்ப்பாணத்திற்கு வெளிச்சத்தையும் நன்முன் மாதிரியையுங் காட்டியிருக்கிறதென்பதை நாம் ஒத்துக்கொண்டோம். ஆனுல் கிறிஸ்த போதனைக் குறைவினுற் போலும் சில கிறிஸ்த பாடசாலைகள் இன்னும் எழிய சாதிப்பிள்ளைகளை ஏற்றுக்கொள்ளக்காணேம். கிறிஸ்த போதகர் அநேகர் தமது விருந்தையில் நம்மவரை நுழையவிடாது இனச்சாதி விலங்கினங்களை மடியிற் தாலும் வைத்துக் கொள்கிறார்கள். எழிய சாதிக் கிறிஸ்தவர்களின் வீடுகளுக்கு எத்தனை போதகர்மார் ஒழித்துப்போய் (செபக்கூட்டத்துக்கல்ல) உலக்கைக்குத் தடி, பாணிப் பனட்டுக்குப் பனங்கட்டி' மாதாளங்கன்று, புட்டுக்குழல் முதலியவை வாங்கிப்போகிறார்கள். சாதிக் கட்டுப்பாட்டால் சில கிறிஸ்தவர்களின் பிரேதசேம ஆராதனைகளை நடாத்த இந்தக் கிறிஸ்த போதகமார் அரோசித்து பின் நிற்பதையும் நன்கறிவோம்.

"ஓர் அநுதாபி" என்று தனக்கு மகுடஞ் சூட்டிய அறிவாளியாகிய இவர் "ஒடுக்கப்பட்டோருக்கு உதவிக்காரனுகிய சுவாமி ருத்திரா கோடீஸ்வரர்" என்ற வசன நடையில் தடக்கிறது ஆச்சரியம். இவ்விதமாக இவர் "வெட்டெனப் பேசிக் காரியத்தைப் பழுதாக்கிக் கொண்டது" மிகத்துக்கமான சங்கதி.

ஒடுக்கப்பட்டவர்களின் ஊழிய சங்கம் சாதிமத பேதமற்ற சங்கமாயிருக்க இந்த "அநுதாபி" ஒரு மதவேற்றுமையை நமக்குள் நாட்ட அநுதாபங்கொண்டு அழுகிறார். நம்மவரைப் பிரித்துவிட்டுக் கூத்துப்பார்ப்பதே இவர் நோக்கம் போலும் இது "இவரின் கீழறிவாற் செய்த" கொடுமையே. நமது நாடு சாதிபேதக் கொடுமையால் சீரிழந்து இழிவடைகிறது. தற்போது உயிர்ச் சேதங்களும் இதனுல் நடைபெறுகிறதை உண்மையான நமது அநுதாபிகள் யாவருமறிவர். ஒத்தால் (ஒன்றுகூடினுற்தான்) வாழலாம். சாதிமத பேதங்களால் நம்தாய் நாடாகிய இந்தியா சுயராச்சிய உரிமைக்கு எவ்வளவோ அபாத்திரமாயிருக்கிறது. யாழ்ப்பாணத்திலுள்ள பேதங்களை நீக்குவது நினைத்து ஒத்துழைப்பின் கைகூடும். பேதங்கள் நீங்கி ஒன்றுகூடி சுயவுரிமை பெறுதலெப்போவென அநேக தேசாபிமானிகள் ஆவலாயிருக்கிறார்கள். பிழைகளைத் தூற்றி பிரிவினைகளை நாட்டி, ஐக்கியத்தை நம்மைவிட்டோட்டி அநுதாப படங்காட்டி ஏமாற்றும் பகைஞருக்கு புத்திகூற அவர்களை முன்னேக்க சீர்திருத்தலின் பக்கமாக்குவது நமது பத்திரிகை நேயரின் கடமை.

ஊழிய சங்கத்தின்,
அங்கத்தவன்.

கதிரைமலை.

கதிரைமலையென்பது, கதிர்காமத்துக்கு மறு நாமமென முன்னுள்ளவர்களாலும் பின்னுள்ளவர்களாலும் கொள்ளப்பட்டு வருகின்றது. கயிலாயமாலைகாரருக்கும் அதுவே கருத்து. இஃதிங்ஙனமாகவும் இக்காலத்து ஆராய்ச்சிக்கார ரொருவர் "கந்தரோடை" என்னும் யாழ்ப்பாணத்திலேயுள்ள ஒரு சிறு கிராமமே முன் கதிரைமலையாகும் என ஆராச்சி செய்திருக்கின்றர் கந்தரோடை யென்பது நாலு பக்கங்களிலும் தளவெளியினுற் சூழப்பட்ட பள்ள நிலமுடைய ஓர் சிறு கிராமம் இவ்விடத்தில் புத்தகோயில் ஒன்று இருந்ததென்பது அங்கே கிண்டி எடுக்கப்பட்ட ஓர் புத்த சிலையினுலும் அழிவுற்று மண்ணுல் மூடப்பட்டுக் கிடக்கும் கட்டிடங்களாலும் விளங்குகின்றது அது எக்காலத்திலாவது, மலையாயிருந்த தென்பதற்கு அணுத்துணையேனும் ஆதாரங் கிடையாது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கு அமானியாய் விடப்பட்டமையின் அச்சிறு கிராமத்துக்கு கந்தரோடை என்னும் காரணப்பெயர் உண்டானது எனக் கன்ன பரம்பரை உளது. இது மிகப் பொருத்தமாகக் காணப்படுகிறது. கதிரைமலையில் மிகப் புகழ் பெற்ற முருகன்கோயில் இருந்ததாகப் பழைய சரித்திரங்களும் பாரம்பரிய வழக்கு முளது. கந்தரோடையில் அப்படியான ஆலயம் இருந்ததென்பதற்கு கன்ன பரம்பரையேனும் வேறு ஆதாரங்களேனும் கிட்டவில்லை. கயிலாயமாலைகாரர் உக்கிரசிங்கன் மாருதப்புரவீகவல்லியை "கந்தல் போவதன்முன்னே, தன்பதிக்குக் கொண்டேகினன் என்பதைமாத்திரம் நம்பி கதிரைமலை யாழ்ப்பாணத்தி லுள்ளதென்றும் அது கந்தரோடையென்றும் ஊகைசெய்யும் ஆராச்சிக்காரர் அவர் தன் பழைய கோலமா முழைஞ்சில் வன்டார்குழலை மணம்புணர்ந்து" என்பதனை நம்பாதுவிடுதற்கு காரணம் யாதோ தெரியவில்லை. யாழ்ப்பாணம் 1800 வருடங்களுக்கு முன்னும் குடியேறப்பெற்றதென இற்றைக்கு 500 ஆண்டுகளுக்குமுன் எழுதப்பட்ட கடலோட்டுக்காதை என்னும் நூலால் விளங்குகின்றது சனங்கள் குடியேறப்பெற்று அரசாங்கமும் உளவாயின அக்காலங்களில் இடங்கடோறுஞ் செல்வதற்குச் செப்பமான பாதைகள் இல்லையென்று கொள்வதெப்படி தேவநம்பியதிசை என்னும் இலங்கை அரசன் காலத்தில் (கி. மு.) அவனுல் அனுப்பப்பட்ட சிங்களப் பிரபுக்கள் யாழ்பாணத்தில் நாவாயேறி பாடலிபுரஞ் சென்றர்களென்று இலங்கைச் சரித்திரங் கூறுகின்றது முன் நல்ல பாதை இருந்தது இல்லாததைப்பற்றி இப்பொழுது நாம் ஊகித்தறிய முடியாது.

சுன்னுகம் புகையிரத நிலையத்துக் கணுக்கராயுள்ள நிலங்கள் இன்றும் கதிரைமலையென்னும் பெயருடன் வழங்குகின்றது இன்னெரு ஆராச்சிக்காரர் கிழம்பி அதுதான் பழைய கதிரமலை எனச் சாதிக்கவுங்கூடும் அதற்கு முன் ஆராச்சிக்காரர் ஏது சமாதானங் கூறுவாரோ தெரியவில்லை.

பழைய ரோமன் நாணயங்கள் காணப்படுதலின் அது ஒரு காலத்துத் தலைநகராயிருந்தல் கூடுமெனில் அங்ஙனங் கொள்வதற்கும் முடியவில்லை. கந்தரோடையில் புத்தகோயில் இருந்தமையின் அவ்விடத்தைப் பார்க்கவந்த கப்பல்வியாபாரிகள் காணிக்கையாகத் தமது நாணயங்கள் சிலவற்றை கோயில் காணிக்கைப்பெட்டியில் போட்டிருக்கலாம் அவ்விடங்களை விட்டுச் சந்தைகள் அகலும்போது தமது நாட்டிற் செல்லாத நாணயங்களை எறிந்துவிட்டுப்போதல் சகசமே அப்படியுள்ள சில நாணயங்களே நிலத்தின்மேற் கண்டெடுக்கப்பட்டன பழைய நாணயங்கள் காணப்படுமிடங்கள் இராசதானிகளாதல் மெனல் சிறிதும் பொருத்தமற்றதாதும் கந்தரோடை கதிரைமலையாயின் அப்பெயர் எக்காலந்தொட்டு வழக்கில் இருக்கிறது அது வந்த காரணம் முதலியன காட்டுதல் வேண்டும். அல்லது குடுதறியெனக் கூறுதல் வேண்டும். விசயன் கதிரையாண்டவர்கோயில் கட்டுவித்ததாகச் சரித்திரமுளது கதிர்காமம் இலங்கை அரசர்; சிலருக்கு இராசதானியாக இருந்ததும் இன்னேரன்ன நியாயங்களால் கந்தரோடை கதிரைமலையல்லவென்பதும் வெளிப்படை.

இங்ஙனம்.
K. T.

இலங்கைக்கு மகாத்மா வந்து திரும்பிவிட்டார்.

மகாத்மா காந்தியவர்கள் தமது மனைவியார் பரிவாரசகிதமாக இலங்கைக்கு வந்து நாலுநாள் யாழ்ப்பாணந் தங்கி இந்தியாவிற்குத் திரும்பிவிட்டனர். இதுமாதிரி இலங்கைக்கு இதுவரையும் வந்துபோன மற்றெவருக்காயினும் மகாத்மா அவர்களுக்குக் காட்டப்படும் மரியாதையும் அன்பும் உபசாரமும் காட்டப்பட்டதேயில்லை யெனலாம். மகாத்மாவுக்கு இலங்கையில் வேண்டிய வசதிகள் யாவுஞ் செய்து சந்தோஷமாக்கும்படி இந்திய பிரதிகாவலர் இலங்கைத் தேசாதிபதியைக் கேட்டுக்கொண்டபடிக்குத் தேசாதிபதியவர்கள் மகாத்மாவைத் தமது மாளிகைக் கழைத்து விருந்திட்டு உபசரித்தார். மகாத்மா இலங்கையிற் சென்ற இடங்களிலெல்லாம் அவரைத் தரிசித்தற் பொருட்டும் அவாது பிரசங்கத்தைக் காதினுற் கேட்டற்கும் பதினுபிரக் கணக்கானேர் கூடிக் கதர்நிதிக்கு மனமுவந்து சுமார் **60000** ரூபா வரையிற் கொடுத்திருக்கின்றனராம்.

மகாத்மா யாழ்ப்பாணம் வந்த ஞாபகார்த்தமாக அஸ்திவாரக்கல் நாட்டினுர்.

இந்தமாசம் ௨௭உ (27 - 11 - 27) ஞாயிற்றுக்கிழமை காலமே 9 மணிக்கு மகாத்மா அவர்கள் தமதுதிருக்கைகளினுல் சுன்னுகம் திராவிட வித்தியாசாலைக்கு அஸ்திவாரக்கல் நாட்டினுர். அப்பொழுது மகாத்மா அவர்களைத் தரிசிப்பதற்கெனக் குழுமிய சனக்கூட்டத்தின்மத்தியில் மகாத்மா அவர்கள் சொல்லியதாவது: "சகோதரர்களே, உங்கள் பிள்ளைகளின் நன்மைக்கு வித்தியாசாலை எவ்வளவு அவசியமோ அதுபோன்று உங்கள் ஞாபகத்தி லிருக்க வேண்டியது, முதலாவது மது மாமிசம் அருந்தல், இறந்த சீவன்களைப் புசித்தல் இவைகளை நீக்கி உண்மையான நற்செய்கையுடையவர்களாகவே நீங்கள் இருப்பீர்களாகில், நீங்கள் ஒருபோதும் தாழ்த்தப்பட்டிருக்கமாட்டீர்கள். உங்கள் பழைய வழக்கங்களைக் கைவிடுங்கள்; மற்றைய வகுப்பினரைப்பார்த்து நீங்கள் முன்னுக்கு வருவதற்குத் தெண்டியுங்கள்; உங்களை முன்னுக்குக் கொண்டுவருவதற்காகவே நான் இந்த வேஷத்தோடிருக்கின்றேன் என்பதை நீங்கள் மறக்கவேண்டாம்; நீங்கள் கொடுக்கும் வேலையை வாங்குவதற்கு மிகவும் ஆயத்தக்காரனுக இருக்கிறேன்; நீங்கள் எனக்குக் கொடுத்த பணமுடிப்பை அன்புடன் ஏற்றுக்கொண்டேன்.

காந்தியும் உபசாரப்பத்திரங்களும்.

மகாத்மா அவர்களுக்கு உதவப்பட்ட உபசாரப்பத்திரங்கள் தமது பயணத்திற்குப் பாரமாயிருப்பதால் ஏலம்போடுதற்கு விட்டார். முதலாவதாக யாழ்ப்பாணம் ஒடுக்கப்பட்டோரின் ஊளியசங்கத்தார் கொடுத்த பத்திரம் 20 ரூபாவாக எடுக்கப்பட்டது. சுன்னுகம் தாழ்த்தப்பட்டவர்களின் சங்கத்தார் கொடுத்த பத்திரம் 25 ரூபாவாக எடுக்கப்பட்டது. மற்றைய கைத்தொழிற் பகுதியாரின் பத்திரம் 50 ரூபாவாக எடுக்கப்பட்டது.

குணமாமணி.

1-ம் அத்தியாயம்.

(முற்றொடர்)

அங்கு நடந்த விசித்திரத்தைக் கண்டு திடுக்கிட்டு வெட்கமடைந்த தங்கம் பின்னைத் திரும்பத் திரும்ப தன் காதலனையே கண்ணிமைத்துப் பார்க்கின்றாள். அப்பொழுது தங்கத்தின் அறையில் மணி பன்னிரண்டடித்தது. இதேசமயத்தில் தென்புறமாக ஒரு பெரிய கூடாரத்திலமைக்கப்பட்டிருக்கும் புது மடம் அல்லது (பொது மடம்) என அழைக்கப்படும் மடம் இரவு பகல் நூறு வேலைகாரராலேயே செய்யப்பட்டதென்றே சொல்லவேண்டும். பிரயாணிகள் வழிப்போக்கர் முதலியவர்கள் தங்கிப் படுப்பதற்கு வசதிகளும் காற்றோட்டம் இவைகள் உண்டு. இம்மடத்தில் படுத்திருந்து போகும் நோக்குடைய வாலிபனொருவன் அங்கு வந்தான். தனக்கு முன் இருவர் வந்து படுத்திருப்பதைக் கண்டும் தான் உடனேபோவதாக நினைத்துப் படுத்தான். இவ்வாலிபன அதி டம்பமான வேஷத்துடன் காணப்பட்டான். இடுப்பில் சலவைமஸ்லும், உடம்பில் பனியன் அதற்கு மேல் இந்தியன் ஸில்க் சேட்டும், சரிகைப் பட்டு அங்கவஸ்திரமும், கையில் பொன் சங்கிலியும், பெருவிரல் நடுவிரல் நீங்கலாக கலப்பினக மோதிரங்களும், பவுண் கடிகாரச் சங்கிலியும் வெகு ஆடம்பரமாய் அணிந்திருந்ததுடன் காலில் ஐப்பான் சூட் அழகாக மாட்டியிருந்தான் அவன்மீது தற்கால வாசனைத் திரவியங்களாகிய ஒட்டோ மோகினி செண்ட் அருகில் இருப்பவர்களுடைய மூக்கைத் துளைத்து விடுபோலிருந்தது. இத்தகைய கோலாகலத்துடன் படுத்திருப்பவர் நமது தங்கம்மாளின் காதலனாகிய இராசையா இவர் இங்கு படுத்தது தம் நித்திரையில் மாட்டிக்கொண்டார். இங்கு படுத்திருந்த இருவரும் சமயம் பார்த்து விழித்துக்கொண்டதும் இராசையாவின் மோதிரங்களும், சங்கிலி கெடியாரம், காலுக்கு மாட்டியிருந்த சூட்டு முதலியவாவும் அபகரித்துக்கொண்டனர், இவர்களிருபேரும் பேர்போன கள்வர்கள் சப்பன் வீரன் என்றால் யாருக்குந் தெரியவரும் இராசையா இங்கு வந்தது போலவே இராசையாவின் கூட்டாளி முருகேசனுக்குத் தெரியும். முருகேசனால் ஏவப்பட்ட கள்வர்கள். உடனே கல் கல் என்று கால் சிலம்புகள் தங்கம்மாள் அவ்விடம் வருவதாகக் கட்டியங் கூறவும், நமது சப்பன் புன்னகை பூத்த முகத்தோடு வீரனைப் பார்த்த மறுநிமிஷம் "அத்தான், ஏன் இங்கு படுத்திருக்கிறீர்கள்! வீட்டுக்கு வாருங்கள்" என்று தன் இனிய குரலால கூறிக்கொண்டே திருப்புவதற்கிடையில் வீரன் பொத்தென்று தூக்கி ஆயத்தமாயிருந்த வண்டிக்குள் போட்டு குழறுகபடிக்கு வாய்க்குள் சீலையை அமர்த்திப் பிடித்துக்கொண்டான், வண்டியைக் கிழக்கு முகமாகக் கந்தன் செலுத்துகின்றான் ஒரு மைலுக்கப்பால வண்டி போய்க்கொண்டிருக்கிறது. சப்பன் வீரனுக்குச் சாடைகாட்டிக் கேட்கின்றான். நாமெங்கு செல்கின்றோம் தெரியுமா என இதனைக் கேட்டிருந்த தங்கத்தின் மனம் எத்தகைய நிலைமையில் இருந்திருக்குமென்று சொல்லவும் வேண்டுமா. பாவம், என்னசெய்வாள! பூனைவாயில் அகப்பட்ட கிளியதுபோல தவிக்கலானாள். இவர்கள் எங்கு தன்னைக் கொண்டுபோகிறார்களென்றும் ஆருடைய கட்டளைப் பிரகாரம் கொண்டுபோகிறார்களென்றும் தெரியாது. கண்ணீர்விட்டுக் கதறினாள், சற்றுநேரத்திற்கெல்லாம் வண்டி ஓர் மண்பாதையிற் சென்றது. அப்பாதையி னிருபுறமும் தோட்டத்தின் பயிர்கள் செழிப்புற்றிருந்தலினால் இருள் அதிகமாகவிருந்தது. தங்கம்மாளின் உயிர் உடலிற் தத்தளித்துக் கொண்டிருந்ததென்றே சொல்லவேண்டும், அந்நிலையையிலிருந்த தங்கம் தன் அருகில் உட்கார்ந்திருந்த வீரனை நோக்கி, "அண்ணா! என்னை எங்கு அழைத்துச் செல்கிறீர்கள்" என்று கெஞ்சிக் கேட்டாள், சுமார் மணி 2 இருக்கும் புதுமடத்தில் என்ன நடக்கிறதென்று பார்ப்போம். இராசையா நித்திரைநீங்கி எழுந்திருக்கிறான். மணி பார்ப்பதற்கு கெடியாரத்தைப் பார்க்கின்றார், அடுத்த நிமிஷம் கைகளில் மாட்டியிருந்த சங்கிலியைப் பார்க்கின்றார். விரல்களிற்போட்டிருந்த மோதிரங்களைப் பார்க்கின்றார் ஒன்றையும் காணாது ஏக்கமுற்றுக் கலங்குகின்றான்.

இதேசமயத்தில் தங்கம்மாளின் கிழவனாகிய தமையர் சின்னப்பாபிள்ளையும் அங்குமிங்கும் ஓடித் தங்கத்தைத் தேடுகின்றார். பாவம் என்னசெய்வார் கிழவன். அடுத்தவீட்டுப் பண்டாரி கந்தனைக் கூப்பிடுகின்றார் பண்டாரி கந்தனும் அங்கு வந்துவிட்டான், சின்னப்பாபிள்ளை சங்கதியைச் சொல்லாது தான் முன்னும் கந்தன் பின்னுமாக நடந்து புதுமடத்துக்கே சென்றார்கள். அங்கு தனித்திருந்த இராசையன் இவர்களின் வரவைக் கண்டதும் ஓட்டம்பிடித்தான். அப்பொழுது கிழவன் லாந்தரின் உதவியினால் ஆளைக் காணமுடிந்தது. சின்னப்பாபிள்ளை பொலிஸ்டேசனுக்கு போகின்றார். இத்தருணம் முருகேசன் தான் விடுத்த சிப்பந்திகளைத் தேடுகின்றான் தங்கம் இராசையனைத் தேடுகின்றாள் இராசையன் தன் சங்கிலி மோதிரம் கெடியாரம் இவைகளைத் தேடுகின்றான். சின்னப்பாபிள்ளை தங்கம்மாளைத் தேடுகின்றார். இது ஒரு பெருந் தருணந்தான், சிரிப்பு.

(வரும்.)

எண்ணெய் தேய்த்து முழுகுபவர் கவனிக்கவேண்டியது.

உருத்திவாரந்தலைக்கெண்ணெயாகாது
வடிவமிது முதபோதம்
வளர்திங்களுக்குநிகபோதுஞ்சேருமங்கள
வாரந்தமக்கிடர்வரும்
திருமேவுபுதனுக்குமிகுபுத்திவிர்த்தியே
செம்பொனுக்குமாறிவுபோந் [ணெய்
தோஷபோதுடேதமாம்வெள்ளிசனியெண்
செல்வமுண்டாயுமுண்டாம்
பரிசாயுனதாதிவாரத்தனக்கலரி
பொனமனுக்கானசெழுமண்
பச்சைதபோம்னவத்சதுமேருந்துனெளிப்
பார்த்திவந்தாதமென்னை
அர்தாவறிந்தபெரோக்ணெயசேர்த்தெழுக்
காடுவாரன்மாதவேன்
அனுதினமுமனதுநினைதநசதூரிவைன
சறப்பளிக்காதேவனே.

என்னும் ருச்சதகச் செய்யுளால் எண்ணெய் தேய்த்து முழுகுவதற்கு திங்கள், புதன், சனி வாரங்கள் உத்தமமென்று விளங்குகின்றன. முக்கியமாகவில ஸ்நானஞ் செய்வதாலுண்டாகும் பலன்களாவன :ஞாயிறு—அழகுபோம், திங்கள்—பொருள் சேரும். செவ்வாய்—இடருண்டாம், புதன்—அறிவுண்டாம். வியாழம்—அறிவு கெடும், வெள்ளி—பொருள் நாசம், சனி—செல்வமும் ஆயுளும் உண்டாகுமென்பதாம். ஆதலின் விலக்கப்பட்ட கிழமைகளில் மிக அவசியமாக ஸ்நானஞ் செய்யவேண்டின், ஞாயிறு—பூ—செவ்வாய்—மண்—வியாழன்—அறுகு—வெள்ளி—எருத்தூள்—இவைகளை எண்ணெயுடன் சேர்த்துச் செய்யலாமென்பதை மறிக. சிலநூல்களிலே 'அணியாத்திங்களாகாது'' என்றிருத்தலால் திங்கட்கிழமை கூடாதென்பது பெறப்படுகின்றது. விதானமாலையில் 'திங்கட்சனிபுதன் நன்று'' என்று சொல்லி இருத்தலால் திங்கட்கிழமை குற்றமுடையதன்று இதுபற்றியே ஒளவையாரும் "சனி நீராடு" என்றார். சனி நீராடு என்பதற்குச் சனித்தல்—பிறத்தல் என நினைத்து ஆற்று நீர் ஊற்று நீரில் ஸ்நானஞ்செய்ய வேண்டுமெனப் பொருளுரைப்பாருமுளர். சனிக்கிழமையென்பதே அதன் சிறந்த பொருளாகும். பெண்கள் எண்ணெய்தேய்த்து முழுகுதற்குச் செவ்வாய்க்கிழமை வெள்ளிக்கிழமையிற் செய்துகொள்ளலாம். சிலர் திங்கட்கிழமை 12 மணியின்மேல் செய்துகொள்ளலாமென்பார்கள் பெண்கள் தம் நாயகனது சென்ம நட்சத்திரத்தன்று எண்ணெய் தேய்த்து ஸ்நானஞ் செய்யக்கூடாது எல்லோரும் தீபாவலி சிராத்ததினம் ஸ்ரீராமநவமி, விநாயகர் சதுர்த்தி. ஸ்வர்சாதி சுபகாரியங்கள் இத்தினங்களில் முழுகுவதற்கு திதிவார நக்ஷத்ர தோஷம் பார்க்க வேண்டியதில்லை. எண்ணெய்தேய்த்து முழுகுதற்கு வடமொழியில் மலாபகர்ஷஸ்நான மெனச் சொல்வார்கள். அஃதாவது மலம் என்பது அழுக்கு; அபகர்ஷம் எடுத்தல்; அழுக்கெடுத்தல் என்பது அதன்பொருள். அழுக்குத் திரட்டல் என்று தமிழ் வைத்திய சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது. எண்ணெய் தேய்த்துக்கொண்டு குளிர்ந்த நீரில் முழுகலாகாது. வெந்நீரில் முழுகவேண்டுமென்பதே ஆயுள்வேதக் கொள்கை. இதற்கு ஐந்து காய்ச்சல் உண்டென்று கூறப்படும். அவையாவன: தலைகாய்ச்சல், வயிறுகாய்ச்சல் எண்ணெய் காய்ச்சல், நீர்காய்ச்சல், அரைப்புக்காய்ச்சல் என்பனவாம். எண்ணெய் தேய்த்துக்கொள்ளுதற்கு முன் தலை நனையாமலிருக்க வேண்டும்: ஒன்றும் புசியாமலிருக்க வேண்டும். எண்ணெய் தண்ணீர் அரைப்பு இவைகளும் காய்ச்சப்பட்டு இருக்கவேண்டுமென்பதாம்.

இம்முறைப்படி ஸ்நானஞ் செய்வதனால் சரீரத்தின் உள்ளுறுப்புகளும் வெளியுறுப்புகளும் மெலிவடையும் ஆகையினால் கடினமான போசனம் உட்கொள்ளக் கூடாது. தயிர் பால் சேர்க்கக்கூடாது; மிளகு ரசமும் விரைவாகச் சீரணமாகக்கூடிய கறிவகைகளுமே உட்கொள்ளல் வேண்டும் இன்றேல் பல நோய்களுக் கிடமுண்டாகும். வெயில் வருவதற்கு முந்தியே ஸ்நானஞ் செய்துவிட வேண்டும். ஸ்நானஞ்செய்தபின் பட்டினியாயிருத்தல் கடினமான வேலைசெய்தல் சம்போகம் கூடாது.

இப்படி நடந்தால் வாதபித்தாதிகள் தத்தம் நிலை தவறாமலிருக்கும் நரம்பு தோல்களைப் பற்றிய வியாதிகள் நீங்கும், கபாலத்தைப் பற்றிய நோய்களுந் தீரும். மனதிற்கு உற்சாகமுண்டாகும்; பிராணுக்கினி நிலைபெறும் இன்னும் இதனாற் பல நன்மையுளவென்று வைத்திய நூல்கள் கூறும்.

நல்லெண்ணெயின் குணம் சரீரத்திலிருக்குஞ் சிறிய துளைகளில் அதிவிரைவாகப் பிரவேசித்து அதனிலுள்ள தோஷங்களை வெளிப்படுத்திச் சுத்தப்படுத்துகின்றது. இங்ஙனஞ் சுத்தப்படுத்துவதனால் சரீர புஸ்டிக்குப் பிரதானமாகிய சத்தான வஸ்துக்கள் தடையின்றிச் சரீர முழுமையிலும் பரவித் தேக புஷ்டியை உண்டுபண்ணும். இப்படியே சூட்சுமமான துளைகளிலும் பிரவேசித்து கொழுப்பு முதலானவற்றைக் கரைத்துச் சரீரத்தை இயற்கை நிலையிலிருக்குமாறு செய்யுமென்பது சாஸ்திரம். (இந்துசாதனம்)

திருவள்ளுவநாயனர் சரித்திரம்.

நமது குலகுருவாகிய இவர் பிரமதேவனுடைய அம்சாவதாரமாக அவதரித்தாரென்பது அநேகரது அபிப்பிராயம். பகவனாரென்றும் அந்தணர்க்கும் ஆதி என்னும் பறைச்சி வயிற்றிலே பிறந்து, மைலாப்பூரிலே ஒரு வள்ளுவர் மனையில் வளர்ந்தாரென்பது "தொண்டைமண்டலத்து வண்டமிழ்மயிலை வள்ளுவர் மனையில் வள்ளுவர் வளர்த்தனர்" என்பதனால் அறியக்கிடக்கின்றது. வளர்ந்து வேதசாஸ்திர நிபுணர் ஆகி அவற்றின் சாரமாகிய திருக்குறளைப் பாடிச் சங்கப்பலகையில் ஏறி அரங்கேற்றினவர். இவரது தந்தையாராகிய பகவனார் பேரறிமாமுனிவர் எனவும் படுவர். இவரது சகோதரனும் கபிலர் அகவலின்படி, ஒளவை, உப்பை, உறுவை, வள்ளி, அதிகமான், கபிலர் முதலாயினோர் இவருக்குச்சகோதரர் ஆவர். வள்ளுவனாருக்குச் சங்கத்தவர் சம ஆசனங்கொடுக்கப்பின வாங்கினவர் என்பதும் பின்னர் அசரீரிவாக்கால் உடன்பட்டனர் என்பதும் "திருத்தகு தெய்வத்திருவள்ளுவரோ. டொருத்தகு நற்பலகையொக்க—இருக்க, உருத்திரசன்மர்" என்னும் வெண்பாவாற் சொல்லப்படும்.

திருவள்ளுவர் தாமேயெல்லாமோதியுணர்ந்தவர் அவர் பிறர் எவரிடத்துங் கல்வி கல்லாதவர். இவ்வுண்மை நக்கீரர் கூறிய "தானே முழுதுணர்ந்து" என்னும் வெண்பாவாற்பெறப்படும். இவர் திருக்குறளைக்கொண்டு போய்ச் சங்கத்திலரங்கேற்றிய காலத்தில் அரசு வீற்றிருந்த பாண்டியன் உக்கிரப்பெருவழுதி திருக்குறளுக்குமாலை சூட்டினோர் (55) ஐம்பதோடைவருள் உக்கிரப்பெருவழுதியு மொருவன் திருவள்ளுவர் செய்தநூல் வைதிக சமயத்தினரால் மாத்திரமன்று, உலகத்துச் சமயிகள் யாவராலும் மெய்ந்நூலெனக்கொண்டு மெச்சித் தலை வணங்கப்படும் நூலென்பது, கல்லாடர் 'எப்பாலவரு மியைபவே வள்ளுவனார் முப்பான்மொழிந்தமொழி'' எனக் கூறியிருத்தலின், அக்காலத்தவர்க்கு மொத்ததுணிபாம். வள்ளுவர் நூலிலேயாவர்க்குமங்கீகாரமாகிய பொருட்சிறப்பும் இலக்கிய இலக்கண வனப்புமமைந்து கிடத்தலினால் வள்ளுவர்காலத்திலேயே அது பிரமாண நூலாகத் தொடங்கிவிட்டது. மலைவுவருமிடங்கடோறும் இது வள்ளுவன் மொழியென்றால் அவ்வளவில் மலைவு நீங்கிவிடும் கண்ணுதல் கவியிலுங்குற்றங் கற்பித்த நக்கீரரோ தமது இறையனாரகப் பொருளுரையிலே குறளைப் பிரமாணமாக எடுத்தாண்டு போயினரென்றால் மற்றோர்கொள்வது புதுமையாகாது. சேரமான் பெருமான் நாயனார் வள்ளுவர் திருக்குறளைத் தமது நூலிலெடுத்தோதியிருத்தலால வள்ளுவர் சேரமான் பெருமானாயனாருக்கு முன்னுள்ளவரென்பது நிச்சயிக்கப்படும். சிலர் ஒளவை சேரமான் பெருமானாயனார் காலத்திலிருந்தமையால் திருவள்ளுவரும் சேரமான் காலத்திலிருந்தவரேயாதல் வேண்டுமெனபர். ஒளவையார் அதிகமான் கொடுத்த அற்புத நெல்லிக்கனியை யுண்டு ஆயுள் நீட்டம் பெற்றுப் பன்னூறாண்டுயிர் வாழ்ந்திருந்தவர் அவருடைய ஆயுட்காலத்திலொருவர் பின்னொருவராய் எத்தனையோ அரசரிருந்து போயினர். ஆதலால் ஒளவையாருடைய வார்த்திக தசையிலிருந்த வர்களுடைய காலத்தைக் கொண்டு வள்ளுவர் காலத்தை நிச்சயித்தல் கூடாது உக்கிரப் பெருவழுதி கடைச்சங்கத்துக்குக் கடையரசன் கடைச்சங்கம் சுமார் (1800) ஆயிரத்தெண்ணூறு வருஷங்களுக்கு முன்னிருந்தது. இற்றைக்கும் (1765) ஆயிரத்தெழுநூற்றறுபத்தைந்து வருஷங்களுக்கு முன்னே விளங்கிய கரிகாற் சோழன் காலத்து நூல்களாகிய மணிமேகலையினுள்ளுஞ் சிலப்பதிகாரத்தினுள்ளும் மேற்கொள்ளப்பட்ட திருக்குறள் அவ்விரு நூல்களுக்கு முன்னர் தோன்றியதென்பது தானே போதரும்.

சிலப்பதிகார நூற்காலம் (1765) ஆயிரத்தெழுநூற்றறுபத்தைந்து வருஷங்களுக்கு முற்பட்டதென்பது மகாவம்சமென்னும் நூலினுள்ளே வருங்கயவாகு காலத்தாற் றுணியப்படும் ஆகவே திருவள்ளுவர் காலம் (1850) ஆயிரத்தெண்ணூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னுள்ளதென்பது நன்றாக நிச்சயிக்கப்படும்.

இன்னும், இலங்கையை வெற்றிகொண்டு இற்றைக்கு (2060) இரண்டாயிரத்தறுபது வருஷங்களுக்கு முன்னர் அரசபுரிந்த சோழ மண்டலத்தானாகிய ஏலேல சிங்கனுடைய பௌத்திர பௌத்திரனுக்குப் பௌத்திரனாகிய ஏலேல சிங்கன் என்னும் பிரபுவுக்கு திருவள்ளுவர் நண்பினரென்றும், அப்பிரபுவினது கலமொன்று கடலோடி மீண்டுவந்து பாரிற் பொறுத்து மிதவாது கிடந்தபோது திருவள்ளுவர் "ஏலேலையா" என்று கூறித் தொட்டபோது மிதந்ததென்றும், பாரமிழுப்போர் இன்றும் "ஏலேலயா" என்று சொல்லி இழுப்பது அன்று தொட்ட வழக்கம் என்றும் வரும் கன்னபரம்பரையாலும் மேலே செய்த கால நிச்சயம் வியவஸ்தாபனமாம்; (2060) இரண்டாயிரத்தறுபதில் ஏலேல சிங்கனுடைய பிற்சந்ததி ஆதிநூற்கும் (200) வருஷம் வாங்க எஞ்சுவது வெற்றி கொண்ட காலம் (2060) இரண்டாயிரத்தறுபது வருஷங்களுக்குமுன்னரென்பது மகா வம்சத்திற காண்க சிங்கன் என்னும் பட்டப்பெயர் சோழமண்டலத்திலுள்ள இவனுக்கு வந்தது தன் மரபினர் இலங்கையரசு பெற்றகாலத்திற் பெயரோடு விளங்கினமையாற்போலும்

யேசு சமயிகள் தமது சமயத்தவராகிய "தாமச' முனிவர் மைலாப்பூரில் வந்திருந்தபோது திருவள்ளுவரென்னும் பெயரோடு விளங்கினரென்றும், அவர்காலம் யேசுவுக்குப் பின் 50-ம் ஐம்பதாம் வருஷமென்றுங் கூறும் வெளிற்றுரையான வரைபு மிர்ணயத்துக் கொருசான்றும் இனித் திருவள்ளுவமாலையிற் கல்லாடராற் கூறப்பட்ட வெண்பாவும், கல்லாடமென்னும் நூலிலே அவர்கூறிய அகவற்கூற்றும் ஒத்த கருத்தினவாதலின், திருவள்ளுவமாலை பிற்காலத்தாராற் பாடியொட்டப்பட்டதென்பது அறியாமையின் பாலது. அவை வருமாறு:—திருவள்ளுவமாலையிற் கல்லாடர் கூறியது:—"....எப்பாலவரு மியைபவே வள்ளுவனார் முப்பான் மொழிந்தமொழி." கல்லாடம் "...சமயக்கணக்கர் மதவழிக்கூறா—துலகியல்கூறிப் பொருளிதுவென்ற—வள்ளுவன்றனக்கு வளர்கவிப் புலவர்முன் ...."

திருவள்ளுவர், உலகியனெறி வீட்டியனெறி இரண்டும் நன்குவிசாரித் துண்மையுணர்ந்தவர். மாந்தர்க்கு இல்லறம் துறவற மெனனும் இருவகை யறங்களுமே உரியனவென்பதும், அவற்றுள், துறவறத்தை நோக்கியே இல்லறம் சாதிக்கத்தக்கதென்பதும், வீடு தேடுவார்க்குத் துறவறமும், உலகந்தேடுவார்க்கு இல்லறமுமுரியன வென்பதும் அவர் சித்தாந்தம். இல்லறவியல்பு கூறப்புகுந்த திருவள்ளுவர் "அன்பிலாரெல்லாந் தமக்குரியர் அன்புடையார், என்பு முரியர் பிறர்க்கு" என்னுந் திருக்குறளால் அன்பே அதற்குச் சிறந்த இலக்கணமென்றும், துறவுக் கிலக்கணங் கூறயிடத்து, "அவாவென்ப வெல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றுந், தவா அப்பிறப்பீனும் வித்து" என்னுங் குறளால் அதற்கு அவாவின்மையே சிறப்பிலக்கணமென்றும், சித்தாந்தஞ் செய்திருத்தலை யூன்றி நோக்கினால் அவருடைய அற்புத தெய்வப்புலமையி னாற்றல் நன்கு புலப்படும். திருவள்ளுவர் 133 நூற்றுமுப்பத்துமூன்று விஷயங்களையெடுத்து ஆய்ந்தனர். ஒவ்வொரு விஷயங்களும் எஞ்சாமற் கடைபோக அவரால் விசாரித்து நிச்சயம்பண்ணப்பட்டிருத்தலின், அத்துணைப்புத்தி நுண்மையுடையாருக்கு ஒரு விஷயத்திலாயினும் ஒன்றைக் கூட்டவேனும் குறைக்கவேனும் இடம் காணமாட்டார்.

திருவள்ளுவர் எடுத்துக்கொண்ட விஷயங்களுட் சிலவற்றைத் தாமாக விசாரித்த பிறபாஷைப் புலவருட் டலையாயினோர் அவ்விஷயங்கள் மேற்கூறியவற்றையும் ஒப்பு நோக்குமிடத்துத் திருவள்ளுவர் கருத்துக்களே விஞ்சி நிற்றலில், அவரின் விஞ்சினோர் பிறரில்லையெனலே சித்தாந்தமாம் அதுபற்றியே திருக்குறள், இரேக்க, பிரான்சிய, லத்தீன, ஆங்கில முதலிய பாஷைகளிலே மொழி பெயர்க்கப்பட்டு அத்தேயங்களிலே சென்று வழங்குவதாயிற்று. திருவள்ளுவர்க்கு முன்னும் முனிவரும், புலவரும் அறம்பொருளின்ப மெனனு முப்பாற்பொருளு மொருவாறெடுத்துக் கூறினரேனும், அவரெல்லாம், திருவள்ளுவரைப் போலக் கேட்டார் நெஞ்சினுட் பாய்ந்து பதிந்து கொள்ளுமாறு சொல்லுஞ் சொல்வன்மையுஞ் சாதுரியமு முடையரல்லர்.

'எழுத்து முதலாய இலக்கணமெல்லாம்—பழுத்து நின்றுறங்கும் பள்ளி—' என்று புகழப்பட்ட திருக்குறட் சிறப்பு எழுத்தி லடங்குவதன்று.

திருவள்ளுவரை, ஆருகத சமயியென்று சிலரும் சைவசமயியென்று பலரும் வாதிப்பர். ஆயினும் வைதிகசாரங்களை மேற்கொண்டிருக்கு திருக்குறட் கருத்தை நோக்க அவரை ஆருகதரென்று சாதிக்கப்போந்த நியாயங் காண்கிலம்.

Tellippallai. S. P.

விசேஷ அறிவிப்பு.

பியானோ, லில்லிபுளூற், பிடில், ஆர்மோனியம், கிறமபோன முதலிய சகல வாத்தியங்களும், கடிகாரங்களும் திருத்திக் கொடுக்கப்படும். மேற்கூறிய கருவிகளும் மற்றும் தேவையான எந்தச் சாமான்களும் விலைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

கே. எஸ் இரத்தினம்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

ஓரியன்டல் ஸ்டோர்ஸ்.
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

எங்களுடைய இதர வியாபாரங்களுடன் பலபேர் வேண்டுகோளின்படி வீட்டிற்கு வேண்டிய கதிரைகள், கட்டில்கள், மேசைகள், அலுமாரிஸ்கள் பொதுவாக வீட்டிற்கு வேண்டிய எல்லாவித மரச்சாமான்களும், எங்களுடைய மாதிரிகளைக்கொண்டு திறமான தச்சர்களால் கொழும்பில் செய்வித்து யாவரும் விரும்பும் படியாயும் யாவரும் வாங்குவதற்கேற்ற விலைகளில் விற்கின்றோம்.

ஒருதரம் வந்துபாருங்கள்.

வ. அ. துரையப்பா,
Proprietor.

யாழ்ப்பாணம்
அப்போதிக்கரீஸ்.
(பொன்னுச்சாமி ஷாப்)
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

பட்டணத்திற்கு சாமான் வாங்கவந்தால், பிற கடைகளின் விலைகளை அறிந்திருந்தாலும் எங்கள் ஷாப்பின் விலைகளையும் சாமான்களையும் ஒத்துப்பார்த்து வாங்கவும்.

பலவிதமான வேஷ்டிகள் சால்வைகள் ஷர்ட்ச் சீலைகள் மற்றுமுள்ள எல்லாச் சாப்பு சாமான்களும் நேரிலும், பிரத்தியேகமான ஏஜண்டுகள் மூலமாகவும் வரவழைத்து விற்கின்றோம்.

டாக்குத்தர்களால் குறிக்கப்பட்ட எல்லா விதமருந்துவகைகளும், எங்கள்மருந்துச்சாப்பு பிரிவில், நற்சாட்சிப் பத்திரம் பெற்ற ஆட்களைக்கொண்டு, விலை சகாயமாயும், கணக்கமின்றியும், தயாரித்துக் கொடுக்கப்படும் எல்லா பேட்டன்ட்மருந்துகளும்கிடைக்கும்.

Dr. S Ponnusamy,
Proprietor & Manager.

Printed by V. M. Kandiah for and on behalf of the Jaffna depressed classes Association Onnnagam published at the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna.

Printed V. M. Kandiah
Saiva prakasa press.
Vannarpannai

20-10-27)